# அரங்கம் செய்திகள்


தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஏப்பிரல் 26 2019. இதழ் - 61










**குண்டு வெடிப்புக்களும் பொறுப்புக் கூறலும்**

இனக்கலவரங்களிலும் யுத்தத்தினாலும் இயற்கைப்...

பக்கம் - 04



**எம்மவர் உயிர் என்ன துச்சமா?**

நடந்தவை அனைத்தும் உலகையே ஆட்டிப் போட்டிருக்கின்றன.

பக்கம் - 03



**'தீவிரவாத நோயிலிருந்து எமது தலைமுறையைக் காப்பாற்ற முனையுங்கள்' -- ஒரு முஸ்லிம் பெண்ணின் உணர்வு**

பக்கம் -07



**கடந்த காலத்தினை ஞாபகமூட்டும் குண்டுத்தாக்குதல்**

2007க்கு முன்னர் பெரும் வெடிச்சத்தங்களை கேட்ட எமக்கு

பக்கம் - 12



## குண்டுத்தாக்குதலை நடத்தியது இஸ்லாமிய அரசே ஒழிய தேசிய தெளஹீத் ஜமாத் அல்ல என்கிறார் இலங்கை நிபுணர்

(பி.கே. பாலச்சந்திரன்)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் குண்டுத்தாக்குதல்களை நடத்தியது தேசிய தெளஹீத் ஜமாத் என்று கூறுவது தவறு என்று “பயங்கரவாதம், மேற்கு ஆசிய பயங்கரவாதம் குறித்த நிபுணரான” பேராசிரியர் றொகான் குணரட்ண கூறியுள்ளார்.

அமெரிக்கர்களால் “இராக் மற்றும் சிரியாவுக்கான இஸ்லாமிய அரசு” என்று அழைக்கப்படும் “இஸ்லாமிய அரசு” அமைப்புத்தான் இந்தத் தாக்குதலை நடத்தியதாக சிங்கப்பூரில் சர்வதேச கற்கைகளுக்கான ராஜரட்ணம் நிலையத்தில் பாதுகாப்பு கற்கைகளுக்கான விரிவுரையாளராக பணியாற்றும் குணரட்ண கூறியுள்ளார்.

இஸ்லாமிய அரசு தனது உள்ளூர் கிளையின் உதவியுடன் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று முதன்முதலாகக் கூறியவர் டாக்டர் றொகான் குணரட்ணதான்.

“இந்தத் தாக்குதலை தெளஹீத் ஜமாத் அமைப்பு நடத்தியது என்று அமைச்சர் ராஜித சேனரட்ண கூறியது தவறு என்றும் அதனை இஸ்லாமிய அரசு தனது உள்ளூர் ஆட்களின் உதவியுடன் நடத்தியது என்றும் அவர் கூறினார்.

அல்கைதா மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பு ஆகியவை குறித்த நிபுணரான இவர் மேலும் கூறுகையில் “முக்கிய சந்தேக நபரான மௌலவி முஹமட் சஹ்ரான் ஏற்கனவே தௌஹீத் ஜமாத்தில் இருந்து பிரிந்துவிட்டார் என்றும் ஆனால், அவர் பின்னர் இஸ்லாமிய அரசுடன் தொடர்புபட்டு விட்டார்” என்றும் கூறியுள்ளார்.

அரபு மொழியில் மிகுந்த திறமையுள்ளவராக இருந்த போதிலும் சஹ்ரானுக்கு இஸ்லாமிய அரசுடன் தொடர்பெடுக்கும் அளவுக்கு திறமை கிடையாது என்றும் ஆனால், வேறு யாரோ மிகவும் திறமையும், ஆர்வமும் உள்ள இன்னுமொருவரே அந்தத் தொடர்பை எடுத்திருக்க வேண்டும் என்றும் சிறிலங்கா முஸ்லிம் கவுன்ஸிலைச் சேர்ந்த ஹில்மி முகமது கூறுகிறார்.

தொடர்ச்சி... (பக்கம் -02 )

இலங்கையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த ஞயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலையடுத்து வழங்கப்பட்டிருந்த அரச விடுறை செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்தபோதும் இதுவரை கொழும்பு நகரம் முழுமையாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை.

கடந்த ஐந்து நாட்கள் கொழும்பு நகரம் உரிய முறையில் இயங்கவில்லையென அமைச்சர் ராஜித சேனரட்ன செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் திணைக்களத்திற்கும் முப் படையினருக்கும் இடையேயான உரிய




நி.அமிர்தஸன்

## கொழும்பில் பாதுகாப்பு மேலும் அதிகரிப்பு. 76 பேர் கைது- தகவல் வழங்கியவரைக் காணவில்லையென பொலிஸார் தெரிவிப்பு

புதன்கிழமை குறிப்பிடத்தக்களவு மக்கள் நடமாட்டம் கொழும்பில் காணப்பட்டபோதும் குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் கொழும்பு நகருக்குள் சென்றுள்ளதாக பொலிஸார் பிற்பகல் அறிவித்ததையடுத்து மக்கள் நடமாட்டம் மீண்டும் குறைவடைந்துள்ளது.

வியாழக்கிழமையும் முற்பகலும் பொலிஸார் எச்சரிக்கை ஒன்றை விடுத்ததையடுத்த மீண்டும் நகரத்தில் மக்கள் நடமாட்டம் குறைவடைந்துள்ளது.

தகவல் பரிமாற்றங்களில் பிரச்சினைகள் இருந்தாலும் புதன்கிழமை இரவு இடம்பெற்ற தேடுதலில் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புதன்கிழமை காலை அறுபது பேர் கைது செய்யப்பட்டிருந்தாகக் கூறப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் 16 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

பண்டாரகம, திறப்பன, மட்டக்களப்பு, பாலாங்கொட, மாத்தறை, மெகல்லாவ,

தொடர்ச்சி... (பக்கம் -02 )




# கடும்போக்குக் குழுக்களை தேடும் முயற்சிகள்



நாட்டின் சகல பிரதேசங்களிலும் பரந்த தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களுடன் தொடர்புடைய சகலரையும் கைது செய்வதற்கு இராணுவம் தயாராக இருக்கிறது. இதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

குறுகிய காலத்தில் நாட்டிற்குள் இயல்பு நிலையை மீள ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த முயற்சிகளுக்காக விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் இராணுவத்தின் சகல படைப்பிரிவுகளையும் சேர்ந்த ஏழாயிரம் வீரர்கள் நேரடியாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இவர்கள் மத்தியில் புலனாய்வு மற்றும் அதிரடிப்படைகளின் பயிற்சி பெற்ற குழுக்களும் அடங்குவதாக லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் குப்பைக் குழிக்குள் விழுந்து நான்கு பேர் பலி

வவுனியா தாண்டிக்குளம் பிரதேசத்தில் குப்பைக் குழி ஒன்றுக்குள் விழுந்து நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

வவுனியா மாநகர சபையில் பணியாற்றும் நான்கு ஊழியர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.


# ஆளில்லா விமானங்களுக்கு தடை



நாட்டில் எந்தவொரு ட்றொன் (DRONES) அல்லது ஆள் இல்லாத விமானங்களை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

நாட்டின் நிலவும் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் எச்எம்சி விமால் சிறி அறிவித்துள்ளர். இதற்கமைவாக இதனை பயன்படுத்துவதற்காக ஏற்கெனவே அங்கீகாரம் பெற்றவர்களது அனுமதி ரத்து செய்யப்படுகிறது என்றும் அவர் அறிவித்தார்..

# உயிர்தெழுந்த ஞாயிறு தாக்குதல் - 13 நாடுகளை சேர்ந்தோர் உயிரிழப்பு






உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தன்று 13 நாடுகளை சேர்ந்தோர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தோரில் 36 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்கள் சீனா இந்தியா பங்களாதேஷ் டென்மார்க் ஜப்பான் நெதர்லாந்து போர்த்துக்கல் சவூதிஅரேபியா பிரான்ஸ் துருக்கி பிரிட்டன் அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலியா நாடுகளை சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இறந்தவர்களில் 11பேர் இந்தியர்கள் பிரிட்டனை சேர்ந்த 6 பேரும் டெர்மார்கை சேர்ந்த மூவரும் இதில் அடங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயங்களுக்குள்ளானவர்களும் 12 வெளிநாட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 14 பேர் காணாமல் போயுள்ளனர்.

தொடர்ச்சி...

# கொழும்பில் பாதுகாப்பு மேலும் அதிகரிப்பு. 76 பேர் கைது- தகவல் வழங்கியவரைக் காணவில்லையென பொலிஸார் தெரிவிப்பு

வத்தளை, இறக்குவானை, தெல்தெனிய ஆகிய முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் நடத்தப்பட்ட தேடுதலின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். இவர்களிடம் இருந்து வோக்கிடோக்கி உள்ளிட்ட தகவல் சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதேவேளை, வவுனியா நகரிலும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னார் ஆளில்லா விமானங்கள், ஊடகத்துறையினர் பயன்படுத்தும் பல வகையான ட்ரோன் கமராக்கள் அனைத்தும் இலங்கை வான்பரப்பில் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை வியாழக்கிழமை அறிவித்துள்ளது. புதன்கிழமை இரவில் இருந்து இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, புத்தளம் - வனாத்தவில்லு, லெக்டோவத்த பிரதேசத்தில் தி ங்கட்கிழமை கைப்பற்றப்பட்ட பெ ருந்தொகை வெடிப்பொருட்கள் தொடர்பாக தகவல் வழங்கிய நபரைக் காண வில்லையென பாதுகாப்பு பிரி வு தெரிவித்துள்ளது. அவர் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் பாதூப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெ ரிவித்துள்ளனர். வெள்ளிக்கிழமை பள்ளிவாசல்களுக்கு முஸ்லிம்கள் செல்லவுள்ளதால் பாதுகாப்புகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# ‘இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாநாடு ஒத்திவைப்பு’ - கட்சி பொதுச்செயலாளர் கி. துரைராசசிங்கம்



நாட்டின் அசாதாரண நிலைமை கருதி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு ஒத்தி வைக்கப்படுவதோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதின நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், தந்தை செல்வாவின் நினைவு தினத்தையொட்டி 21ம் திகதிய குண்டுத் தாக்குதலில் உயர்நீத்த உடன்பிறப்புகளுக்கு அஞ்சலி செலுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்றுள்ள அசாதாரண நிலைமையில் கட்சின் மாநாடு மற்றும் மேதின நிகழ்வு என்பன தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி...

# குண்டுத்தாக்குதலை நடத்தியது இஸ்லாமிய அரசே ஒழிய தேசிய ...

அத்துடன் குண்டுத்தாக்குதலில் ஈடுபட்ட 9 குண்டுதாரிகளில் சிலராவது வெளிநாட்டு பட்டங்களைப் பெற்ற, உயர் கல்விகற்ற செல்வந்தர்கள் என்பதும் உறுதி செய்யப்படுகின்றது.

பல பிளவுகளைக் கண்ட தௌஹீத் இயக்கம்

இலங்கையின் தௌஹீத் ஜமாத் பல பிளவுகளை கண்டிருப்பதாகவும் சஹ்ரானின் பிளவு அதில் இறுதியாக நடந்திருக்கிறது என்றும் றொகான் குணரட்ண கூறுகிறார்.

கொள்கையில் ஏற்பட்ட கடும்போக்கே இந்த பிளவுகளுக்கு காரணம் என்கிறார் குணரட்ண.

தௌஹீத் ஜமாத் குறித்த ஈர்ப்பு தமிழ்நாட்டு தௌஹீத் ஜமாத் அமைப்பில் இருந்தே வந்திருக்கிறது. அந்த அமைப்பு அங்கு பி.ஜே என்று அழைக்கப்படும் பி. ஜைனுலாப்தீன் கீழ் பலமாக இருக்கிறது.

இதற்கிடையே தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு தமக்கு இந்தத் தாக்குதல்களில் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்று மறுத்திருக்கிறது.



# எம்மவர் உயிர் என்ன துச்சமா?

நடந்தவை அனைத்தும் உலகையே ஆட்டிப் போட்டிருக்கின்றன. உலகெங்கும் இதுதான் இந்த வாரத்தின் தலைப்புச் செய்தி. நல்லதுக்கு அல்லாமல் இழப்புக்காக நாம் தலைப்புச் செய்தியில் இடம்பெற்றிருக்கிறோம்.

இங்கு நான் இழப்பு என்று சொன்னது தமிழரின், கிறிஸ்தவ சமூகத்தின் இழப்பை மாத்திரமல்ல. இஸ்லாமிய சமூகத்துக்கும் இது இழப்புதான்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை இந்த சியோன் கிறிஸ்தவத்தை பின்பற்றுவோர் ஒப்பீட்டளவில் மிகவும் மென்மையானவர்கள். அவர்கள் தாக்கப்பட்டமை மனித நேயத்தில் கைவைக்கப்பட்ட ஒரு நிகழ்வு.

இலங்கை முழுவதும் 45 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்ட நிலையில், மட்டக்களப்பில் 14 குழந்தைகள் பலிகொள்ளப்பட்டிருக்கின்றன. பயங்கரவாதத்தின் உச்சக்கட்டம் இது.

இலங்கை முழுவதும் வழமையாக இப்படியான தாக்குதல்களை அடுத்து பிரதிவிளைவுகள் மிகவும் மோசமாக இருப்பது வழக்கம். காரணம் என்னவாக இருந்தாலும் இந்தத்தடவை பொதுமக்கள் அப்படியாக இல்லாமல் அமைதி காத்தது வரவேற்கத்தக்கது.

மட்டக்களப்பு முழுவதும் அழுதை இந்தத்தடவை பார்த்தேன். தாளமுடியவில்லை. ஆனாலும் இங்கு பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் மாத்திரமல்ல முஸ்லிம் மக்களும் இதனால் பாதிக்கப்பட்டதாகவே கருதுகிறேன். அவர்கள் சங்கடத்தில் தலைகுனிந்து நிற்பது வருத்தத்துக்கு உரியதுதான்.

மத வழிபாட்டிடங்கள் மீதான தாக்குதலின் வலியை உணர்ந்தவர்கள் அவர்கள். ஒரு சிலர் செய்த வேலைக்கு இங்கு அவர்களை முழுமையாகக் குற்றஞ்சொல்ல முடியாது. ஆனால், அவர்களுக்கும் இங்கு பொறுப்பு இருக்கிறது.

மட்டக்களப்பின் சில முஸ்லிம் ஊர்களில் தீவிர இஸ்லாமிய அமைப்புக்களின் செயற்பாடுகள் எல்லை மீறிப் போனபோது அதனைக் கண்டும் பேசாதிருந்ததன் விளைவை இப்போது முஸ்லிம் சமூகம் அறுவடை செய்திருக்கிறது. பலதடவைகள் அவர்கள் நீதியை மீறிச் சென்ற போது, பெண்களுக்கு எதிராக சில சந்தர்ப்பங்களில் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் இறங்கிய போது மிதவாத முஸ்லிம்கள் பேசாதிருந்ததன் விளைவை இன்று இவர்கள் அறுவடை செய்கிறார்கள். இதுபோலவே தமிழ் இயக்கங்கள் எல்லை மீறிய போதும் சில மிதவாத தமிழ் புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் மௌனம் சாதித்தனர். அதன் விளைவை அவர்கள் அனுபவித்தனர். இதேநிலை இன்று முஸ்லிம்களுக்கு.

ஆனால், 99 வீதமான முஸ்லிம்களுக்கு இந்த போக்கில் உடன்பாடு இருக்க வாய்ப்பில்லை. ஆனால், அமைதியாக இருந்ததும் குற்றந்தான். பொதுவாகவே முஸ்லிம்கள் ஒரு வணிக சமூகம். அவர்களுக்கு தீவிரவாதத்தில் ஈடுபாடு இருக்க வாய்ப்புக் குறைவு. ஆனால், அவர்கள் மத்தியில் தீவிரவாதம் வளர்ந்தபோது அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தது பெரும் பிழை.

கிழக்கில் காணி விவகாரம் உட்பட பல விவகாரங்களில் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கு இடையில் முரண்பாடு இருந்தது உண்மைதான். பல்வேறு காரணங்களுக்காக நானும் முஸ்லிம்களை விமர்சித்தது உண்மைதான். சக சமூக இணக்கப்பாடு குறித்து "அரங்கம்" பேசிய போதெல்லாம் இங்குள்ள முஸ்லிம் சமூகம் விலகியே இருந்துவந்தது. எம்மைப் புறக்கணித்தே வந்தனர். ஆனால், அனைவராலும் அவர்கள் குற்றவாளிகளாக நடு மன்றத்தில் விடப்பட்டிருக்கின்ற போது அவர்கள் தனிமைப்பட்டுப் போக தமிழர்கள் அனுமதிக்கக்கூடாது.

தமிழர்களைப் பொறுத்தவரை கடந்த பல தசாப்தங்களாக நாமும் சங்கடத்தை அனுபவித்தவர்கள்தான். இப்போது நீங்கள் அனுபவித்த வேதனையை எம்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்களும் இப்போது அனுபவிக்கிறார்கள். இப்போது தமிழர்களின் கடமை அவர்களுக்கு கைகொடுப்பது. அவர்களை இந்தச் சங்கடத்தில் இருந்து வெளிவர நாம் உதவ வேண்டும். முஸ்லிம்களும் நிலைமையை முழுமையாக உணர்ந்து அவர்கள் தமது நடவடிக்கைகளை மீள் ஆய்வுக்கு உட்படுத்த அவகாசம் தேவை. அதற்கு சக சமூகத்தின் ஆதரவும் தேவை. அதனை தமிழ்ச் சகோதரர்கள் இப்போது செய்ய வேண்டும். வலிகள் மிகுந்த இந்த நேரத்தில் இது கஸ்டம் என்பதும் புரிந்துகொள்ளக்கூடியதுதான். ஆனால், வலியிலும் நிதானம் காப்பதும், அடுத்தவர்க்கு உதவுவதும் வீரமே. அது எமது கிழக்குத் தமிழர்களுக்கு இருக்கின்றது என்பதை துணிந்து காண்பிப்போம். நாம் அதனால், தோற்றுப் போய்விட மாட்டோம்.

இன்னுமொரு விடயமும் இங்கு மனதை நெருடுகிறது. வெளிநாட்டில் திட்டமிடப்பட்டு உள்ளூரவரைக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலாக இதனை பலரும் கூறுகிறார்கள். இங்கு தாக்கப்பட்ட இலக்குகள் அனைத்தும் இலகுவானவை. இங்கு பெரிய பாதுகாப்பும் இருக்கவில்லை. இலகுவாக குண்டை

**சீவகன் பூபாலரட்ணம்**

அங்கு கொண்டு சென்று வைத்துவிட்டு வெளியேறியிருக்க முடியும். ஆனால், இந்த இலகுவான இலக்குகளைத் தாக்க எம்மண்ணின் மைந்தர்கள் தற்கொலைக் குண்டுதாரிகளாக பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அப்படியானால், இலக்கு வைக்கப்பட்ட எம்மக்களை மாத்திரமல்ல, தீவிரவாத இயக்கத்துக்காக போராட முன்வந்த எம் மண்ணைச் சேர்ந்த தாக்குதலாளிகளின் உயிர்களையும் திட்டமிட்டவர்கள் துச்சமெனவே மதித்திருக்கிறார்கள். மொத்தத்தில் தாக்கியவரோ, இலக்கு வைக்கப்பட்டவரோ எம்மக்கள் அனைவரின் உயிர்களும் துச்சமாக மதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பதில் சொல்லவாவது நாம் விழித்துக்கொள்ள வேண்டும்.

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே

## என்னையும் அவர்கள் சிலுவையில் அறைந்தார்

**எஸ் எல் எம் ஹனீபா**

**உயிர்த்த ஞாயிறில்**
**ஓடிய குருதியில்- நானும்**
**கலந்தேன் - நானும்**
**கரைந்தேன்**
**ஒவ்வொரு உயிரிலும்...**
**உயிரின் அணுவிலும் ....**
**ஓடிப்பதறி ஒழிந்து**
**மாய்ந்தேன்**
**கருகிய உடலாக**
**சாரா என்றொரு**
**தங்கக் கட்டியைக் கண்டு...**
**நெஞ்சம் பதைக்க**
**நினைவை இழந்தேன்**
**எனது பேத்தியும்- அவன் தன்**
**மகளும், நாமம் ஒன்றே!**
**உயிரும் ஒன்றே!**
**ஊனும் குருதியும் ஒன்றே மானீடா!**
**எங்கள் மூஸாவே!**
**எங்கள் யேசுவே!**
**எங்கள் முஹம்மதே!**
**புத்தன் வழியின் புண்ணிய பூமியே!**
**இந்தப் பழியை எந்தக் கடலில்**
**கழுவித்துடைப்போம்**
**யா அல்லாஹ்!**

## எப்பகா இந்தப்பாலம் முடியும்?

**திரு. சிவலிங்கம், மட்டக்களப்பு**

மட்டுநகர் மத்தியில மக்கள்போகும் பதையில
முந்தியெப்போ கட்டிவச்ச பாலக்கத கேளுங்ளேன்
கோட்டமுனப் பாலமெண்டா கேட்டாஅந்தக் காலத்தில
குட்டிப்புள்ள கூடச்சொல்லும் அம்மளவு பேமஸ்தானே
முட்டுவச்ச காலக்கம்பிப் பாலத்தில சாத்திவச்சி
முன்னப்பின்ன வந்துபோகும் பொண்புரசப் பாக்கத்தானே
பட்டப்பகல் நேரங்கூட வேலவட்டி இல்லாமத்தான்
பாத்துநிப்பார் அந்தநாளில் எம்மளவு ஆம்பிளைகள்!

ஆத்தங்கர ஓரத்தில விஜயாத்தியேட்டர் பக்கத்தில
ஆசையாக் கிழங்குவட பொரிச்சிவிப்பார் சேட்டாஅப்பா
பாத்தாலெச்சி நாவிலூறும் போகாமத்தான் காலும்நிக்கும்
பக்குவமா கொஞ்சம்வாங்கி சாவல்கட இஞ்சிப்பிளேன்டி
சேத்துவச்சித் தான்குடிக்க சொர்க்கம்காலுக் கீழேநிக்கும்
சும்மாபுறகு பாலத்தில போய்நிண்டா காத்துத்தூக்கும்
ஆத்தாளல்லாம் கனவப்போல அதுகளெல்லாம் ஆகிப்போயித்து
அந்தக்கோட்ட முனப்பாலம் இப்போபாதி ஆகிப்போயித்து

பாத்திருக்க நம்மஊரில் எப்படித்தான் மாடிமன
பகலிரவா எழும்புதுகா பாலம்மட்டும் படுக்குதுகா
பொத்திப்பொத்தி அந்தநாள்ல கண்ணப்போல கட்டிவச்ச
பாலத்த உடச்சுப்போட்டு பம்மாத்துக் காட்டுறாங்க
எத்தன வரிசம்போகும் எண்டுஒள்ளம் கேப்பமெண்டா
ஒராங்கட்டச் சாத்திரியும் செத்துக்கன காலமாச்சி
கத்திக்கத்திக் கோட்டமுனப் பாலம்படும் பாட்டக்கேக்க
கந்தோர்ல யாருமில்ல தாயில்லாப் புள்ளபோல

# குண்டு வெடிப்புக்களும் பொறுப்புக் கூறலும்

இனக்கலவரங்களிலும் யுத்தத்தினாலும் இயற்கைப் பேரிடர்களினாலும் மனத உயிர்களைப் பலிகொடுத்து வாழ்ந்த நாம், கடந்த பத்து வருடங்களாக இரத்த வாடையின்றி மரண ஓலங்களின்றி உயிர்ப்பயமின்றி வாழ்ந்த சூழலில் மீண்டும் புதிய வடிவில் மனிதத்துயர் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதனை இலங்கை மக்களும் அரசும் எதிர்கொண்ட விதம், இந்தச் சம்பவத்துக்கான பொறுப்புக் கூறல் அதனூடாக எதிர்கால எமது வாழ்வைக் கட்டியெழுப்புதல் என்பவை தொடர்பாக ஆழமாக சிந்திக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

இவ்விடயத்தில் மனித அறம் மீறாமல் செயற்பட்ட அனைத்து மக்களையும் இலங்கை அரசையும் பாதுகாப்புப் படையினரையும் முதலில் பாராட்ட வேண்டும். 1983ம் ஆண்டு 13 படையினரின் இறப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற இனஅழிப்பையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கொடிய யுத்தத்தையும் எவரும் மறப்பதிற்கில்லை. 13 பேருக்காக நடந்த ஒரு இனக்கலவரம் இன்று 300 பேருக்கு மேற்பட்டிருந்த போதும் எந்த ஒரு இனவன்முறையோ எந்தவொரு தனிநபருடைய உயிரோ பறிக்கப்படவில்லை என்பது ஆறுதலளிக்கும் விடயமாகும். இலங்கை மக்களும் அரசும், அரச படைகளும் கடந்த காலம் போல் நடந்துகொள்ளவில்லை. அந்தளவுக்கு எமது மனித விழுமியங்கள் எம்மிடம் மேம்பட்டிருக்கின்றன. அதனால்தான் 50 மேற்பட்ட குழந்தைகள் உடல் சிதறுண்டு கொல்லப்பட்ட போதும் எவருமே பொறுமையிழந்து மிருகமாக மாறி மற்றவர்களைப் பழிவாங்கத் துடிக்கவில்லை. இந்த மனிதார்த்துவம் எமது மக்கள் அனைவருக்கும் வளர்ந்திருப்பதையிட்டு நாம் பெருமைகொள்ளலாம்.

அடுத்து, அரச படைகள் செயலாற்றிய விதம் பொதுமக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்தது. காலை 8.45 மணிக்கு ஏற்பட்ட முதல் வெடிப்பைத் தொடர்ந்து அன்று பி.ப. 2.15 மணிக்கு கிட்டத்தட்ட 5.30 மணி இடைவெளிகாலத்துக்குள் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிர்த்தியாகத்துடன் பிரதான சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து பாதுகாப்புப்படையினர் ஒன்றன் பின் ஒன்றாக சந்தேக நபர்களை கைது செய்து, வெடிகுண்டுகளை மீட்டது அவர்கள் மேல் பொதுமக்களுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்திற்று. அதனால் மக்கள் சட்டத்தினை கையிலெடுக்க வேண்டிய தேவை இல்லாது போயிற்று. இவ்வாறு செயற்பட்ட பாதுகாப்புப் படையினரது திறமையினையும் தியாகத்தினையும் பாராட்டத் தவறக் கூடாது. இவ்வாறு பாதுகாப்புப் படையினர் துரிதமாக செயற்படாது இருந்திருந்தால் மக்கள் நம்பிக்கையிழந்து, வன்முறைகளில் இறங்கியிருப்பார்கள். அது எமக்கு மற்றுமோர் பேரழிவாக இருந்திருக்கும் என்பதை மறுக்கமுடியாது.

மேற்படி விடயங்களை மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பயங்கரவாதச் செயலுக்கான பொறுப்புப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இன்று எம்மில் பலர் மனிதத் தன்மையினை இழந்து மத அடிப்படைவாத நிலைப்படுத்தப்பட்டு வருகிறார்கள். 1980 களுக்கு முன்பு எந்த ஒரு மதமும் தன்னை முதன்மையானதாக்கி தானே உண்மையானது என்றும் தனது கோட்பாடுகள் மாத்திரமே சரியானது என்றும் மற்றவைகள் எல்லாம் சாத்தான்கள் என்றும் அழிக்கப்பட வேண்டியவைகள் என்றும் கேவலமான ஒன்றாக சித்திரித்து பிரசாரம் செய்தது கிடையாது. இப்போது எல்லா மதங்களும் தாங்கள் மட்டுமே உண்மை என்றும் மற்றவைகள் சாத்தான்கள் அல்லது பேய்கள் என்றும் கடுமையான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறான இன்றையப் போக்குக்கு ஒவ்வொரு மதப்பெரியோர்களும் அவர்கள் சார்ந்த அமைப்புகளும் பொறுப்பேற்க வேண்டும்.

மற்ற எல்லா மதங்களையும்விட இஸ்லாம் மதம் இலங்கையில் காத்தான்குடியை மத அடிப்படைவாத கருத்தியல் தளம் கொண்ட ஒரு நகரமாகவும்; இஸ்லாத்தின் கொள்கை வகுப்புக் கேந்திர மையமாகவும் கட்டமைத்திருக்கிறது. இந்தக் கட்டுமானத்திற்கு வாய்ப்பாக அமைந்த ஒரு காரணி தமிழர்களுக்கும் சிங்கள அரசுக்கிடையிலுமான யுத்தகாலச் சூழல் எனலாம்.

**எழுவான் வேலன்**

தமிழர்களுடைய நியாயமான கோரிக்கையில் ஒன்றுபட்டிருந்த முஸ்லிம் சமூகத்தினை மொசாட்டினுடைய ஆலோசனையின் பேரில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்தெடுப்பதில் வெற்றி கண்ட இலங்கை அரசு முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு வேண்டிய சலுகைகளையும் அதிகாரங்களையும் வழங்கியிருந்தது. இந்த சலுகைகளையும் அதிகாரங்களையும் பெற்றுக்கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகளும் மதத்தலைவர்களும் தங்களின் பாதுகாப்புக்கென தனியான முஸ்லிம் ஊர்காவல் படையினையும் உருவாக்கியிருந்தார்கள். (இது 'ஜிகாத்' எனவும் அழைக்கப்பட்டது) அத்துடன் தங்களை தமிழர்களில் இருந்து வேறுபட்ட ஒரு தனித் தேசிய இனமாக கட்டமைப்பதில் ஆர்வம் கொண்ட முஸ்லிம் அரசியல் தலைவர்களும் மதத்தலைவர்களும் இஸ்லாத்தையும் அதுசார்ந்த பண்பாட்டையுமே தங்களுடைய இன அடையாளமாக முன்னிறுத்தினார்கள். இதனால் இற்றைவரை காலமும் தமிழர்களோடு இணைந்திருந்த தமிழ் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் இஸ்லாத்தின் பெயரால் தூய்மைப்படுத்தி மதஅடிப்படைவாதத்தினை வளர்த்தெடுப்பதில் கடுமையாக உழைத்தார்கள். தூய இஸ்லாம் பண்பாடு என்ற கருத்தாக்கத்தில் அவர்கள் வளர்த்தெல்லாம் மதஅடிப்படைவாதத்தினையேயாகும். முன்பு மிகச் சாதாரணமாக பெண்கள் முக்காடு இடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் அது பர்தாவாக மாறியதன் பண்பாட்டு மாற்றம் இந்தப் பின்னணியிலேயாகும். இந்த மத அடிப்படைவாதத்துக்கு எதிராக இருந்த பல இஸ்லாமிய மதத்தலைவர்கள் காத்தான்குடியை விட்டு விரட்டப்பட்டார்கள். அவர்களுடைய பள்ளிவாசல்கள் அடித்து நொருக்கப்பட்டன. இதற்கு அவர்கள் உருவாக்கியிருந்த முஸ்லிம் ஊர்காவற்படையில் பயிற்சி பெற்றவர்களும் அதற்காக வழங்கப்பட்ட ஆயுதங்களும் உதவின. உதாரணமாக பயில்வான் என்பவருடைய பள்ளிவாசலைக் குறிப்பிட முடியும்.




எவ்வாறு ஆயுதமுனையிலும் தமிழ்த் தேசியத்தின் பெயரிலும் தமிழர்களிடத்தில் இருந்த சனநாயகவாதிகளும்



புலமையாளர்களும், கலைஞர்களும்,நிறுவுனரான சஹ்ரான் ஹாசிம் என்பரே
கொல்லப்பட்டு அல்லதுபிரதான சூத்திரதாரி என்பதையும்
மௌனமாக்கப்பட்டு அல்லது விரட்டப்பட்டுவெளிப்படுத்தியிருந்த போதிலும் கௌரவ
தமிழ் சுயநிர்ணய உரிமை என்பது தமிழ்ஆளுநர் ஹிஸ்புல்லா அவர்கள் இதனை
இனவாதமாக வளர்க்கப்பட்டு காத்தான்குடிப்மறுத்துள்ளார். இது போன்றே விஜயதாச
பள்ளிவாசல் படுகொலை நடந்ததோ, அதேராஜபக்ச அவர்கள் 2016ம் ஆண்டு நவம்பர்
போன்று காத்தான்குடியில் இஸ்லாத்தின்மாதம் 18ம் திகதி பாராளுமன்றத்தில்
பெயரிலும் ஆயுதமுனையிலும்மேற்படி அமைப்பின் 4 குடும்பங்களைச்
இஸ்லாம் என்கின்ற உன்னத மதத்தினைசேர்ந்த 32 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில்
உயிராக நேசித்த புலமையாளர்களும்இணைந்து பயங்கரவாதச் செயலுக்கு
கலைஞர்களும் சனநாயகவாதிகளும்தயாராகி வருவதாகக் கூறியபோது இம்
மௌனமாக்கப்பட்டு அல்லது விரட்டப்பட்டுமுஸ்லிம் அரசியல் தலைவர்கள் அதனை
இஸ்லாமிய மத அடிப்படைவாதம்மறுத்து சபித்ததாகவும் தற்போது இவர்கள்
வளர்த்தெடுக்கப்பட்டு தேவாலயப்படுபொறுப்புக் கூறவேண்டும் எனவும்
கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. கூறியுள்ளார்.

இரண்டுமே நியாயப்படுத்த முடியாதஇந்தப் பொறுப்புக்கூறலில் இருந்து இவர்கள்
மிருகத்தனமான ஈனச் செயல் என்பதில்விடுபட்டு அஞ்சலிகளை மட்டும் தெரிவிப்பது
மாற்றுக் கருத்தக்கு இடமில்லை.சமூகப்பொறுப்பற்ற ஒன்றாகவே
முன்னையதின் ஆதிக்கம் முடிந்து விட்டது.கருதவேண்டியுள்ளது. இலங்கை மக்களிடம்
பின்னையது ஆரம்பித்திருக்கிறது.முஸ்லிம்கள் தொடர்பான நம்பிக்கை
இந்த ஆரம்பம் காத்தான்குடியைஉடனடியாக கட்டியெழுப்பப்படாதவிடத்து
மையப்படுத்தியே உருவாகியிருப்பதைபாதிப்படைபவர்கள் நாளாந்தம் உழைத்து
இற்றைவரையான செய்திகள் மூலம்சாப்பிடும் சாதாரண ஏழை மக்களேயாகும்.
விளங்கிக் கொள்ளக்கூடியதாககுண்டு வெடித்த நாள் தொடக்கம்
இன்றுவரை வெளியூர்களுக்குச் சென்று தொழில்புரியும் எந்த ஒரு தொழிலாளியும் தொழிலுக்குச் செல்லவில்லை இத் தொழிலாளர்களின் குடும்பங்களைப் பற்றியோ அவர்களின் நாளாந்த உணவு மற்றும் பிற தேவைகள் தொடர்பாகவோ எந்த ஒரு அரசியல்வாதியும் கவனத்தில் கொண்டதாகவும் தெரியவில்லை.

எனவே அரசியல்வாதிகளும் மதத்தலைவர்களும் இனிவரும் காலங்களில் இவ்வாறானதொரு மனிதப் பேரவலம் நடக்காதிருப்பதற்கு பின்வருவனவற்றைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

1. மதப் பாடசாலைகள், மதநிறுவனங்கள்,
இருக்கின்றது. இந்த இடத்தில்தான்மத அமைப்புக்கள் ஏனைய மதங்களை
தங்களுடைய தேவைக்கும் நலன்களுக்கும்நிந்தனை செய்யாமல் தங்களுடைய மத
இஸ்லாமிய அடிப்படைவாதத்தினைஅறத்தை மட்டும் போதிப்பது.
உருவாக்கிய சிங்கள அரசியல்
தலைவர்களும் முஸ்லிம் அரசியல்2. ஒவ்வொரு மதப் பாடசாலைகளும்
தலைவர்களும் மதத் தலைவர்களும்மதநிறுவனங்களும் மத அமைப்புகளும்
பொறுப்புச் சொல்லவேண்டியவாகளாகமற்ற மதப் பாடசாலைகளையும்
இருக்கின்றார்கள். பொறுப்புச் சொல்லல்மதநிறுவனங்களையும் அமைப்புக்களையும்
என்பது தற்போதைய குற்றத்தைமதித்து நடத்தல்.
ஏற்றுக்கொள்வது என்று அர்த்தமல்ல
தற்போதைய குற்றம் ஏற்படுவதற்கு ஏதோ3. மதத்தின் அல்லது இனத்தின் பெயரால்
ஒரு வகையில் காரணகர்த்தாக்களாகஎந்த ஒரு நபரின் உயிருக்கோ அல்லது
இருந்திருக்கிறார்கள் என்பதும் அந்தத்உடலுக்கோ தீங்கு விளைவிக்காதிருத்தலை
தவறினை இப்போது மானசீகமாககற்பித்தல்.
ஏற்கிறார்கள் என்பதும் இனிமேல்
இவ்வாறான தவறுகளுக்கு இடம்4. இவற்றை கடைப்பிடிக்க முடியாதவர்களை
கொடுப்பதில்லை என உணர்கிறார்கள்கண்காணித்து சமூகத்தால் எடுக்கவேண்டிய
என்பதுமே முக்கியமானதாகும். ஆனால்நடவடிக்கைகளை எடுத்தல் முடியாதவிடத்து
இவர்களிடமிருந்து இவ்வாறான பொறுப்புச்சட்டத்தின் முன் கொண்டுவருதல்.
சொல்லல் இதுவரை வெளிவராது
இறந்தவர்களுக்கான அஞ்சலியைஇலங்கை மக்களின் பரஸ்பர
செலுத்துவதும் வெறும் கண்டனத்தைபுரிந்துணர்விற்கும் மகிழ்ச்சியான
வெளியிடுவதுமாக இருப்பதுதான்வாழ்வுக்கும் இவ்விடயங்களை கவனத்தில்
வேதனையான விடயமாக இருக்கின்றது. எடுத்துச் செயற்படுவதுடன் ஒவ்வொருவரும்
அனைத்து சமூக நிகழ்வுகளுக்கும்
இலங்கை அரசு தேசிய தவ்ஹீத் ஜமாத்பொறுப்பாளிகள் எனும் உணர்வும்
எனும் அமைப்பே இப்பயங்கரவாதச்எம்மிடம் வளர்க்கப்பட வேண்டும். இந்தப்
செயலுக்கு காரணம் என்பதையும் இதன்பொறுப்புணர்வே நம்பிக்கையான
மகிழ்ச்சியான சமூகத்தை கட்டியெழுப்பும்
ஒன்றாகும்.



# பட்டறிவு

# ஈஸ்டர் படுகொலைகள்:
# முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்தக் கூடிய விளைவுகள்

நான்கு நாட்கள் கடந்தும் இதுவொரு கலவரமாக உருவெடுக்காமல் இருக்கிறதென்றால் அதற்கு பல காரணங்கள் உண்டு.

வேகமாக வதந்தி பரப்பக் கூடிய அளவுக்கு தொலைத்தொடர்பு சாதங்களும், சமூக வலைத்தளங்களும் வளர்ந்திருந்தும் கூட அது நிகழாமல் இருப்பதற்கு இன்னொரு காரணம் அத்தகைய நவீன தகவல் தொடர்பு சாதன நுகர்வோரில் பலர் பொதுப்புத்திக்குப் பின்னால் செல்லாமல் அறிவுபூர்வமாக சிந்தித்து பிழையான போக்குகளையும், சிந்தனைகளையும் கண்டித்து, தடுத்து நிறுத்தும் போக்கும் கூடவே வளர்ந்திருப்பது தான். முகநூல், ட்விட்டர், யுடியூப் போன்றவற்றில்கூட முன்னர் போல நினைத்ததை பகிர்ந்துவிட முடியாது. வேகமான முறைப்பாடுகள் அவற்றை கட்டுப்படுத்தி விடுகின்றன. அதுமட்டுமன்றி சமூகவிரோத உள்ளடக்கங்களை (தகவல், கருத்து, படங்கள், வீடியோக்கள் போன்றவற்றை) தன்னியல்பாக கட்டுப்படுத்தும் அல்கோரிதம் (Algorithm) நன்றாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தது இலங்கையில் நிகழ்ந்த கடந்தகால கலவரங்களின் போதெல்லாம் பெரும்பான்மை சமூகத்துக்கு அரச அனுசரணை நேரடியாகவோ மறைமுகமாகவோ கிடைத்தது. இன்று அது சர்வதேச அளவில் அம்பலப்பட்டிருக்கிறது. இலங்கை அரசை இந்த விடயத்தில் உலகம் முழுவதும் உற்றுக் கவனித்து வருகிறார்கள் என்பதை அரசும் அறியும். எல்லாவற்றுக்கும் மேல் இலங்கை அரசு சர்வதேச மனித உரிமைகள் விசாரணைக்கு உட்படுத்துவதிலிருந்து கடந்த பத்தாண்டுகளாக தப்பி வருகிறது. இந்த நிலையில் தன்னை தற்காத்துக்கொள்ள அரச இயந்திரம் கணிசமான விலையைக் கொடுத்தாக வேண்டியிருக்கிறது.

கலவரங்களுக்கு அரச அனுசரணை வழங்குவது என்பது முன்னர் போல எல்லாக் காலத்திலும் அரசியல் லாபமீட்டக்கூடியதல்ல என்பதை இன்றைய அரசியல் தலைவர்கள் பலர் உணர்ந்திருகிறார்கள்.

எங்கேயாவது குண்டுவெடிப்பு அல்லது கொலை, சண்டை போன்ற ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்ததும் உண்மை வெளிவருமுன்னரே ஊகங்களே அந்த இடைவெளியில் ஆக்கிரமித்து விடுகின்றன. அதுவே ஆரம்பநிலை கலவரங்களுக்கு காரணமாகி விடுகின்றன. இலங்கை வரலாறு நெடுகிலும் இதுவே நிகழ்ந்துள்ளது. 1883இல் சரியாக 136 வருடங்களுக்கு முன்னர் இப்படி ஒரு குருத்து ஞாயிறன்று தான் இலங்கையின் முதலாவது மதக் கலவரம் இதே கொட்டாஞ்சேனைப் பகுதியில் நிகழ்ந்தது. வதந்திகள், ஊகங்கள் எப்படி ஒரு கலவரத்தை உண்டுபண்ண வல்லவை என்பதற்கு அங்கிருந்தே உதாரணம் பெறலாம்.

இலங்கையில் நிகழ்ந்த அத்தனை கலவரங்களின் போதும் வதந்திகளே கலவரத்தை மேலதிக சூடேற்றி அழிவுகளை உண்டு பண்ணியுள்ளன. பல்லின, பல்மத நாடான இலங்கையின் வளர்ச்சியை பல ஆண்டுகளுக்கு பின்னோக்கித் தள்ளியதற்கு அடிப்படை காரணமே இந்த பல்லின சமூகங்களுக்கு இடையில் நிகழ்ந்துவந்த பாரபட்சங்களும், ஆண்டாண்டு காலமாக வளர்த்தெடுக்கப்பட்ட பரஸ்பர வெறுப்புணர்ச்சியும்தான். எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம் என்பதைப் போல இந்த சந்தர்ப்பங்களை பல்வேறு சக்திகள் தத்தமது நலன்களுக்காக எரிகிற தீயில் எண்ணெய்யையூற்றி லாபம் காண முற்பட்டிருக்கின்றன.

## உறைய வைக்கும் பீதி

யுத்தம் நடந்த காலப்பகுதியில் சாதாரண தமிழ் மக்கள் எப்படி பீதிக்குள் உறைய வைக்கப்பட்டிருந்தார்களோ அந்த நிலைமையை இனி முஸ்லிம்கள் எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதை தெளிவாக உணர முடிகிறது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் எப்போதும் கண்காணிப்புக்கு உள்ளாகியிருத்தல்,



எப்போதும் சுற்றி வளைப்புக்கும், சோதனைக்கும், கைதுக்கும் உள்ளாதல், இதன் விளைவாக தமது இன அடையாளத்தை மறைத்து நடந்து கொள்ள முயற்சித்தல், சமூகத்தில் அதிக போக்கை வெளிக்காட்டுதல், பல இடங்களில் விட்டுக்கொடுத்தலை செய்தல். எந்த நேரத்திலும் தாம் வீணாக சந்தேகத்துக்குள்ளாகலாம் என்கிற பீதியுடனேயே எங்கும் பயணித்தல், எவர் தம்மை பார்த்தாலும் தம்மை சந்தேகிப்பதாக கருதிக் கொள்ளும் உளவியல், அரச, தனியார் நிறுவனங்களின் சேவையைப் பெறுவதிலும், தொழில்களைப் பெறுவதிலும் சந்தர்ப்பங்கள் பாதிப்படைதல் என இது தொடரப் போவதை கட்டியமாகவே கூறலாம்.

ஏனென்றால் அப்படி ஒரு சூழலில் கடந்த காலம் தமிழ் மக்கள் இருத்தப்பட்டார்கள். அரச இயந்திரம் இதைப் புரிவதற்கு ஏற்கெனவே பழகியிருக்கிறது. சிங்கள சிவில் சமூகமும் அத்தகைய நிறுவனமயப்பட்ட பாரபட்சத்தை நிகழ்த்தியிருக்கிறது. பாதுகாப்பு சார்ந்த அதிகாரம் பாதுகாப்புத் துறையினரிடம் இருந்து சிங்கள சிவில் சமூகத்துக்கும் பகிரப்பட்டிருந்தது சந்திரிகா காலத்தில் பொலிசாரோடும், படையினரோடும் சேர்ந்து பணியாற்றக்கூடிய “சிவில் பாதுகாப்பு அமைப்பு” என்கிற பேரில் அரசால் அமைக்கப்பட்ட சிறு சிறு அமைப்புகள் மூலை முடுக்கெல்லாம் பண்ணிய அட்டகாசத்தை நாம் மறந்திருக்கமாட்டோம்.

சிங்கள இனவாத சக்திகள் தமது கைகளில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு அராஜகத்தையும், தனிப்பட்ட குரோதங்களையும் கூட தீர்த்துக்கொண்ட சந்தர்ப்பங்களை நாம் எப்படி மறப்பது. தெருவில் ஒரு சிங்களவர் இன்னொருவரைக் காட்டி “இதோ புலி” என்று ஒரு சவுண்டு விட்டால் போதும் குறித்த நபர் தன்னை நிரூபிக்க எந்த சந்தர்ப்பமும் கிடைக்காமல் அடித்து கொல்லப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக கொலன்னாவை எண்ணெய்க்குதங்கள் புலிகளால் தாக்கப்பட்ட வேளை தெமட்டகொட, கொலன்னாவ, தொட்டலங்க பகுதிகளில் அப்பாவி மலையக இளைஞர்கள் இந்த “சிவில் பாதுகாப்பின்” பேரில் குரூரமாக கொல்லப்பட்ட சம்பவங்களை நேரில் சென்று விசாரித்து சரிநிகரில் கட்டுரைகளாக எழுதியிருக்கிறேன். அதனைப் பதிவு செய்ய தொட்டலங்க என்கிற இடத்துக்கு போயிருந்தபோது என்னையும் அதே பாணியில் ஒரு கூட்டம் விரட்டிக்கொண்டு வந்தபோது அதே பிரதேசத்தைச் சேர்ந்த என்னுடைய உறவினர் ஒருவரால் காப்பற்றப்பட்டதையும் சரிநிகரில் பதிவு செய்திருக்கிறேன். இந்த நிலையில் தற்போது அரசாங்கம் மீண்டும் அவசர கால சட்டத்தை இப்போது கையிலெடுக்கப்போவதாக அறிவித்திருப்பதையும் கவனத்திற்கொள்க.

*1883இல் சரியாக 136 வருடங்களுக்கு முன்னர் இப்படி ஒரு குருத்து ஞாயிறன்று தான் இலங்கையின் முதலாவது மதக் கலவரம் இதே கொட்டாஞ்சேனைப் பகுதியில் நிகழ்ந்தது.*

சொந்த அனுபவம்

இதே 90களில் சிங்களப் பொதுக்கூட்டமொன்றில் நான் ஆற்றிய உரை பின்னர் ஹிரு பத்திரிகையில் பிரதான கட்டுரையாக பிரசுரித்திருந்தார்கள். அதை இந்த இடத்தில் பகிர்வது பொருத்தமென நம்புகிறேன்.

“தாய்மார்களே... சகோதர்களே... நான் தினசரி எனது வீட்டில் இருந்து கிளம்பும் முன் என்னை சுய பரிசோதனை செய்துகொள்வேன். அடையாள அட்டை இருக்கிறதா? எனது உடைகள் சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறதா? உருவ அமைப்பில், எனது நடை உடையை வைத்து சந்தேகம் கொள்ள வாய்ப்புண்டா? என்று உறுதி செய்துகொண்டதன் பின்னர்தான் வெளியேறுவேன். வீட்டிலிருந்து வெளியேறியதிலிருந்து கொட்டாஞ்சேனை பஸ் தரிப்பு நிலையம் செல்லும் வரை ஒவ்வொரு திருப்பத்திலும் என்னை எவரும் அவதானிக்கிறர்களா? சந்தேகப்படுப்படும்படி போலீசாரோ வேறெவரோ தெரிகிறார்களா? என்பதை பீதியுடன் பார்த்து திரும்புவேன். பஸ்ஸில் கண்டக்டருடன் வீண் உரையாடலைத் தவிர்ப்பதற்காக எப்போதும் மாற்றிய சில்லறைகளை கொண்டுவந்திருப்பேன்.

**என்.சரவணன்**

சரியாக 4.50 சதத்தைக் கொடுத்துவிடுவேன். என்னிடம் பத்திரிகையில் எழுதுவதற்கான உசாத்துணை நூல்களோ ஆவணங்களோ இருக்கும். சரிநிகர் அலுவலகத்துக்குப் போக கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் ஆகும். அந்த இடைவேளையில் தப்பித்தவறி கூட ஒரு நூலை எடுத்து வாசிப்பதை தவிர்த்துவிடுவேன். எவர் கண்களுக்கும் எனது தமிழ் அடையாளம் வெளித்தெரிந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பேன். இறங்கும் இடம் வந்ததும் முன் கூட்டியே வாசல் வரை சென்று எந்தக் கதையுமின்றி இறங்கிவிடுவேன். மீண்டும் அலுவலகத்துக்குள் நுழையும் வரை ஒவ்வொரு திருப்பத்திலும் அதே பீதியுடன், படபடப்புடன், சந்தேகத்துடன் தான் போய் சேர்வேன். இத்தனைக்கும் நான் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட, சிங்களம் தெரிந்த, அரசாங்கம் கொடுத்த ஊடக அடையாள அட்டையையும் கொண்டிருக்கிற ஒரு இளைஞன். நிரபராதி...

இப்போது நான் கேட்கிறேன் தாய்மாரே... என் வயதையொத்த உங்கள் பிள்ளைகள் இப்படித்தான் வாழ்கிறார்களா? இது என் கதையல்ல என்னைபோன்ற லட்சகணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நாளாந்தம் இத்தகைய பீதியில் தான் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். சராசரி சிங்கள இளைஞர்களின் நாளாந்த வாழ்வுக்கும் தமிழ் இளைஞர்களின் அனுபவித்துவரும் வாழ்வுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது...” என்றேன். இந்த உரை பலரின் உணர்வுகளைத் உலுக்கியிருந்தது என்று ஹிரு பத்திரிகையின் நண்பர்கள் அன்று என்னிடம் தெரிவித்தார்கள்.

யுத்தம் முடிந்ததும் சகல இன மக்கள் மத்தியிலும் பரஸ்பரம் இருந்த சந்தேகம் போய்; சரளமாக பழகும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அந்த வாய்ப்பு இப்போது மீண்டும் பறிக்கப்படுகிறது. இப்போது அந்த நிலைமை முஸ்லிம்களுக்கு எதிராக திருப்பப்படப் போகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான “பேரச்ச வெருண்ட உணர்வு” (islamicphobia) ஏற்கனவே வளர்த்தெடுக்கப்பட்டு இருக்கிறது. ஈஸ்டர் படுகொலைகள் அந்த நிலைமையை உச்சகட்டத்திற்கு நகர்த்தியிருக்கிறன.

இப்போதைக்கு வன்முறை வடிவம் எடுக்காதது நிம்மதியே. ஆனால் இது இப்படி தொடரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

# மௌனமாக இருந்தவர்கள் கூட தீவிரவாதத்தை ஆதரித்தவர்கள் என்பேன்’

2002 இல் என்று நினைவு. எங்களது ஊரில் திடீரென உருவெடுத்த ஒரு பெயர் தெரியாத அமைப்பு தொலைகாட்சி பார்ப்பது ”ஹராம்” என்று பிரச்சாரம் செய்யத்தொடங்கியது. இந்தச் செயல்பாடு பிரச்சாரத்தோடு நின்றுவிடவில்லை. வீடு வீடாகச் சென்று அன்டனாக்களை உடைப்பது, சீடி விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களை எச்சரிக்கை செய்து, கடைகளை எரிப்பது என்று வன்முறையாக மாறியது.

கறுப்பு அபாயாக்களையும், நீண்ட அங்கிகளையும் கொண்டுவந்து இதுதான் இஸ்லாமிய உடை என்று யாரோ சில வியாபாரிகள் அறிமுகம் செய்தார்கள். எங்கள் இறுதித் தூதர் முஹம்மத் நபி அவர்கள் வாழ்ந்த மண்ணில் பெண்கள் எல்லாம் இதைத்தான் அணிகின்றார்கள். இது எங்கள் கலாசாரம் என்று ஏற்பதற்கு



பெண்களையும் பிள்ளை களையும் பழக்கப்படுத் தினார்கள். இது பெண்களுக்குப் பாதுகாப்பான கௌரவமான உடை என்பதான உணர்வை வலிந்து உருவாக்கிப் பெண்கள் வாயாலேயே சொல்லும்படி மூளைச்சலவை நடந்தது. பாடசாலை மாணவிகளும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகளும் கறுப்பு அங்கியை மட்டுந்தான் கட்டாயமாக அணியவேண்டும் என்று வெள்ளிக்கிழமை ஜும்மாக்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இது எங்கள் ஊரில் மட்டும் நிகழ்ந்த சம்பவமில்லை. பெரும்பாலாக முஸ்லிம்கள் வாழும் எல்லா ஊரிலும் இப்படித்தான் நடந்தது.

திடீரென்று முளைத்த சிந்தனைப் பள்ளிகளுக்கு அரபு நாடுகளிலிருந்து நிதி வசூலாகி வந்தது. வெறும் நூறு இருநூறோ ரூபாய்களை மட்டும் நன்கொடையாக செலுத்தி நாங்கள் கற்ற குர்ஆனை மாதாந்தம் மூவாயிரம் செலுத்திக் கற்கும் நிலை உருவாக்கப்பட்டது. மத கல்வி அவசியமேயின்றி முன்னிறுத்தப்பட்டது. வியாபாரமானது. கிலாபத் பற்றிய எண்ணங்கள் இளைஞர்களிடையே விதைக்கப்பட்டு இந்த பூமி முஸ்லிம்களால் ஆழப்படவேண்டியது என்ற பிரம்மை திணிக்கப்பட்டது. சில உலமாக்கள் சொத்துக்கள் சேர்த்தார்கள். எங்களுக்குத் தெரிய பாங்கு முழங்கிக் கொண்டிருந்த சம்பளமே இல்லாத மௌலவிகள் வெளிநாடுகளுக்குப் போய் வந்தார்கள். அவர்கள் வீடுகளுக்குப் பாக்கிஸ்தானிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் நண்பர்கள் வந்து தங்கிச் சென்றார்கள். அவ்வப்போது ஆடு மாடு அறுத்து விருந்துகள் நடத்தினார்கள். கஞ்சாவை அம்மியில் அரைத்து இறைச்சிக் கறி சமைத்த வாசம் எங்கள் மூக்குத் துவாரங்களை அரித்துக் கொண்டு காற்றிலேறிப் போனது.

இவர்களுக்குள் இந்த சிந்தனை மாற்றங்கள் எப்படித் திடிரெனத் தோன்றின என்று சிந்திப்பதில் யாருக்கும் ஆர்வம் இருக்கவில்லை.
சிங்கள மக்கள் சீத்தையையா அணிகின்றார்கள்? அவர்களது கலாசாரத்தில் மாற்றம் உண்டாகவில்லையா, நாங்கள் அபாயா அணிந்தால் தீவிரவாதமா என்று அபாயா திணிக்கப்பட்ட அரசியலுக்கு முட்டுக் கொடுப்பதை வெட்கமேயின்றி நிகழ்த்தி வெற்றி கண்டவர்கள் முகங்கள் எல்லாம் வரிசையாக கண்களில் வந்து போகின்றன.

மதத்தின் பெயராலான இத்தகைய சின்னச்சின்ன எக்ஸ்ட்ரீம் செயல்பாடுகளின் ஊற்றுக்கண்களை ஆழமாக நோக்கத் தவறியதோடு, அமெரிக்கா 9/11 தாக்குதலுக்குப் பின்னர் இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாகப் பார்க்கும் சூழ்நிலையை, இஸ்லாமோபோபியா போன்ற அரசியல்களைப் பேசுவதை மனிதாபிமானச் செயற்பாடாக கருதியவர்கள் எல்லாம்கூட இன்றைய இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களே.

**ஸர்மிளா செயித்**

இஸ்லாமிய தீவிரவாதம் குறித்து பேசுகின்ற எழுதுகின்றவர்களை மேலைத்தேய கைக்கூலிகள் என்றவர்கள், உண்மையை உரக்கப் பேசிய எழுதியவர்களின் கழுத்துகள் நெறிக்கப்பட்டும், சமூக ஊடகங்களிலும், வாழ்விலும் அவமானப்படுத்தப்பட்டபோதும் மௌனித்திருந்தவர்கள்கூட இதன் பின்னால் இருக்கிறார்கள்.

இப்போது வெள்ளம் தலைக்கு மேல்! நாடகங்களின் அரங்குகளை மாற்றவேண்டிய தருணம்.

இலங்கை முஸ்லிம்களின் எதிர்வினைகளை மூன்று வகையாகப் பார்க்க முடிகின்றது.
1) தப்பிக்கும் தந்திரம்
2) குற்றஞ்சுமத்துதல்
3) எதிர்காலம் குறித்த அச்சம்
இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதத்திற்கு எதிராக அழத் தொடங்கியிருக்கி(றோம்)றார்கள். இது தப்பித்தல், அச்சம் சார்ந்தது.

குண்டு வைத்தவர்கள் தீவிரவாதிகள், கொல்லப்படவேண்டியவர்கள், அவர்கள் முஸ்லிம்கள் அல்ல, இஸ்லாம் தீவிரவாத மார்க்கமல்ல என்பதெல்லாம் தப்பித்தல் மற்றும் குற்றச் சுமத்தல் உளவியல் சார்ந்தவை.

தீவிரவாதிகளுக்கு மதமில்லை. அவர்கள் யாராக இருந்தாலும் கொல்லப்படவேண்டும் என்று தப்பிக்க முற்படும் பச்சோந்திகளாக முஸ்லிம்கள் மாறவேண்டியது காலத்தின் தேவையாகியிருக்கிறது.

தீவிரவாதக் கருத்துக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் எதிர்வினையாற்றி இருக்கிறோமா என்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைக் கேளுங்கள். மௌனமாக இருந்தவர்கள்கூட தீவிரவாதத்தை ஆதரித்தவர்கள் என்பேன். சமூக ஊடகங்களில் வெளியான மத தீவிரவாத கருத்துக்களை நமக்கென்ன என்றும், யாரோ ஒருவன் உளருகிறான் என்றும் பொறுப்பற்று இருந்த நீங்கள் இப்போது நல்லிணக்கம் பேசுகிறீர்கள். தீவிரவாதிகளைக் கொல்லவேண்டும் என்கிறீர்கள்.

முளையிலேயே கிள்ளி எறியவேண்டியதை, அதற்கான வாய்ப்புகள் இருந்தும் நீங்கள் செய்ய முன்வரவில்லை. கழுத்திற்கு கத்தி வந்துவிட்ட பிற்பாடே தீவிரவாதம் ஒழிக்கப்படவேண்டும் வன்முறைகளுக்கு மார்க்கத்தில் இடமில்லை என்று கத்துகிறீர்கள். தேவைக்கு அதிகமாக சிந்தனைப் பள்ளிகள் வந்தபோது, அபாயா, முகமூடிகள் வந்தபோது அதனைக் கலாசார மாற்றம் என்பதாக அங்கீகரித்தவர்கள், அவற்றை எல்லாம் நம் கைகளில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# இலங்கை மீதான தாக்குதல் அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்ட செய்தி

இலங்கைத் தமிழர் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்ட காலத்தில், பூகோள அரசியல் போட்டிக்குள் இலங்கைத்தீவு உட்படவில்லை. திருகோணமலை அம்பாந்தோட்டைத் துறைமுகங்களை மேற்குலக நாடுகள் இலக்கு வைத்திருந்தாலும் விரும்பிய நேரத்துக்குச் சுதந்திரமாக தமது போர்க்கப்பல்களை அனுப்பக் கூடிய நிலைமையும் இருந்திருக்கவில்லை. ஆக 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில், மிகவும் இலகுவான முறையில் இலங்கைத்தீவில் தாம் நினைப்பதை சாதிக்கக் கூடியதாக இருக்கின்றது இந்த மேற்குலக நாடுகளுக்கு.

இவ்வாறனதொரு சூழலில்தான் இலங்கைத்தீவில் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை குண்டுகள் வெடித்திருக்கின்றன. அமெரிக்கா எங்கு கால்பதிக் முற்படுகின்றோ அங்கெல்லாம் தாக்குதல் நடத்த முடியும் என்ற செய்தி இந்தக் குண்டுத் தாக்குதல் மூலம் உணர்த்தப்பட்டிருக்கின்றது. இந்தியா பாக்கிஸ்தான் முரண்பாடும் சீனா பாக்கிஸ்தான் உறவையும் இந்தத் தாக்குதலின் பின்னணியாக இருக்குமோ என்ற கேள்விகள் எழுகின்றன.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையோன முரண் நிலையும், அமெரிக்க இந்திய உறவுக்குக் காரணம். இந்த அமெரிக்க - இந்திய உறவுதான் பாக்கிஸ்தான் சீன உறவுக்குப் பக்கபலமாகவும் அமைந்ததெனலாம். எனவே இந்து சமுத்திர பிராந்தியத்திற்கான ஆதிக்கப் போரின் வடிவமாவும் இலங்கைத் தீவில் நடந்த குண்டுவெடிப்பை நோக்கலாம்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலை கருத்தில் கொண்டே தாக்குதலை நடத்திய ஐஎஸ் பயங்கரவாதிகள் நன்கு திட்டமிட்டுள்ளனர். பௌத்த சிங்கள மக்கள் மீதோ பௌத்த விகாரைகள்



**அ.நிக்ஸன்**

மீதோ தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால். அது முஸ்லிம்களை நோக்கிய எதிர்த்தாக்குதலுக்கு வழி சமைத்திருக்கும்.

இதன்காரணமாவே கிறிஸ்தவ தேவாலயங்களும் வெளிநாட்டவர் தங்கும் நட்சத்திர ஹோட்டேல்களும் மற்றும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பும் தாக்குதலுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

சிங்கள, தமிழ் கிறிஸ்தவ மக்களும் வெளிநாட்டவர்களுமே குண்டுத் தாக்குதலில் இறந்திருக்கின்றார்கள். எனவே தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கமும் இலக்கும் சரியானதாகவே அமைந்துள்ளன.

இந்தத் தாக்குதல் திடீரென நடத்தப்பட்டதல்ல. நீண்டநாட்கள் திட்டமிடப்பட்டே உரிய நேரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. இது ஐஎஸ்.பயங்கரவாதிகளின் தாக்குதலாக இருந்தாலும் உள்ளூர் நபர்களின் அல்லது குழுக்களின் ஆதரவுகள் நிச்சயமாக இருந்திருக்க வேண்டும்.

இலங்கை ஏனைய அண்டை நாடுகளோடு நிலத்தொடர்புடையதல்ல. இலங்கை ஒரு தீவு. ஆகவே முதன் முறையாக வெளிச் சக்திகளின் தீவிரவாதத் தாக்குதல் ஒன்று நிலத் தொடர்பில்லாத இலங்கைத் தீவில் நடத்தப்பட்டிருக்கின்றது. ஐஎஸ் பயங்கரவாதிகள் சிரியாவில் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்று அமெரிக்கா மார் தட்டிக் கொண்டிருந்த நிலையில், நிலத் தொடர்பற்ற தனித் தீவான இலங்கையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை அமெரிக்காவை மாத்திரமல்ல இந்தியாவையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

1997 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்திருந்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில்தான் உண்மையான பயங்கரவாதம் இலங்கைக்கு வந்துள்ளது என்பதை அமெரிக்காவுக்கு இந்தத் தாக்குதல் உணர்த்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலிலும்கூட அமெரிக்கா புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களை கைது செய்வது வன்னியில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று புகலிடம் கோரியுள்ள முன்னாள் போராளிகளை கைது செய்வது, விசாரிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு, சிங்கள பௌத்த மக்களையும் இலங்கை அரசாங்கத்தையும் சாந்தப்படுத்தும் வேலைத் திட்டங்களிலேயே ஈடுபடுகின்றது. இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கூட விசாரணை நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கம் இலங்கையில் அமைக்கப்பட்ட பின்னர் கைவிடப்பட்டுள்ளன. ஆகவே இதன் பின்னணியிலேதான் இலங்கையில் எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டுத் தப்பித்துவிடலாம் என்ற தைரியம் இலங்கை இராணுவத்துக்கு மாத்திரமல்ல பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபடும் வெளிச்சக்திகளும் வந்துவிட்டது என்பதே கொழும்பில் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு வழங்கியிருக்கும் மற்றுமொரு தகவலாகும். இலங்கை தொடர்பான விடயத்தில் அமெரிக்கா இவ்வாறான அணுகுமுறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதுதான் சீனா, பாக்கிஸ்தான் ஆகிய நாடுகள் தமது உறவின் மூலம் இலங்கையை எப்படித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் அல்லது அமெரிக்கா இலங்கையில் நிலைகொள்வதை எவ்வாறு தடுக்க முடியும் என்ற உத்திகளைக் கையாளுகின்றன. அதன் ஆரம்ப வெளிப்பாடுதான் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு என்று கூறலாம்.

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில்தான் இராணுவம் தமது முகாம்களை அமைத்துள்ளது. நூற்றுக்கு தொண்ணூற்றைந்து சதவீதமான இராணுவத்தை வடக்கு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# ‘தீவிரவாத நோயிலிருந்து எமது தலைமுறையைக் காப்பாற்ற முனையுங்கள்’ -- ஒரு முஸ்லிம் பெண்ணின் உணர்வு




(உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலை அடுத்து பாத்திமா மஜிதா தனது முகநூலில் பதிந்த இரு கட்டுரைகள் இங்கு தரப்படுகின்றன. நல்லிணக்கம் நாடி அவை உங்கள் பார்வைக்கு -- ஆசிரியர்)

**பாத்திமா மஜிதா**

**1)** "தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் அல்ல, அவர்கள் பயங்கரவாதிகள், அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் சம்பந்தமில்லை என்று சப்பைக் கட்டுவதை நிறுத்துங்கள் கூட எங்களை நாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ளாவிட்டால் எங்கேயோ போய் முட்டி மோதி விடுவோம்."

" நடைபெற்று முடிந்த தாக்குதல்கள் அரச அதிகார சக்திகளின் துணையோடுதான் நடைபெற்றுள்ளன என்பதற்கு நிறைய சாட்சியங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. ஆனால் அரசினை மட்டுமே நாங்கள் பொறுப்புக்கூறுவது ஒரு வித தப்பித்தல் முறை. ஒரு வித அச்சம் சார்ந்த முறை.

தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் அல்ல, அவர்கள் பயங்கரவாதிகள், அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் சம்பந்தமில்லை என்று சப்பைக் கட்டுவதை நிறுத்துங்கள். கூட எங்களை நாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ளாவிட்டால் எங்கேயோ போய் முட்டி மோதி விடுவோம்.

கிட்டத்தட்ட இரு சகாப்தத்தின் முன்னால் போய் நின்று பார்க்கின்றேன். என்னையும் என்னைச் சுற்றி இருந்தவர்களும் படித்த பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வேலை செய்த இடங்கள் எல்லாவற்றிலும் மனிதம் மட்டுமே இருந்தன. படிப்படியாக அரேபியக் கலாச்சாரம் தலைக்கு ஏறத் தொடங்கியது. முஸ்லிம், காபிர் என்ற பிரிவினைவாதப் போக்கினை இந்த ஒற்றைக் கலாச்சாரம் ஏற்படுத்தி விட்டது.

அன்று நாம் சாப்பிட்ட நாரிசாச் சோறு, பராத் ரொட்டி போன்ற எல்லாவற்றினையும் "ஹராம்" என்ற ஒற்றைக் கதவு போட்டு அடைத்து விட்டார்கள். ஒவ்வொருவரும் அடுத்த சமூகத்திலிருந்து பிரித்து விடப்பட்டுள்ளோம்.

நான் ஐந்து வயதாக இருக்கின்ற பொழுது எனது ஆடையை பற்றி கேள்வி எழுப்பாத மத்ரஸாக்கள் இன்று எனது எட்டு வயது மகள் கருப்பு ஹபாயாவினை அணிந்து வந்தால் தான் ஓத முடியும் என்று சட்டம் வகுக்கின்றன. பாவாடை சட்டை தாவணி அணிந்து பாடசாலை சென்ற ராத்தா பல்கலைக்கழகம் செல்கின்ற அவளது மகளுக்கு கண்கள் இரண்டு மட்டும் தெரியும் விதமாக ஹபாயாவினை போர்த்தி அனுப்பி வைக்கின்ற சூழல். தெருவுக்குத் தெரு பள்ளிவாசல், காபிர் - ஷைத்தான் என்று கதறுகின்ற ஒலி பெருக்கிகள். போதாக்குறைக்கு நோன்பு, பெருநாள் காலங்களில் பேரீச்சம் பழமும் குர்பான் இறைச்சியும் கொடுத்து இந்த அப்பாவிச்சனங்களை போட்டோ எடுக்கின்ற சகிப்புத் தன்மையற்ற வகாபிசத்தின் கொடூரங்கள். எல்லாவற்றினையும் நாங்கள் பார்த்தும் பார்க்காமலும் இருந்த இந்த நோயின் கடைசித் தருணம் தீவிரவாதமாக மாறி உயிர்களை பலியெடுக்கின்ற நிலைமை.

இந்தக் குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இக்கட்டான நிலையில் நிற்கின்றது. இனிமேலாவது சவுதியின் கைக்கூலிகளான இத்தீவிரவாதப் போக்கினை கண்டுகொள்ளாமல் விடுவது முஸ்லிம் சமூகத்திற்கு மிகவும் ஆபத்தானது. ஆனால் இந்த நிலைமையை விளங்கிக்கொள்ளாது நம்மை நாமே தப்பித்துக் கொள்ளவதை விட்டு இந்த தீவிரவாத நோயிலிருந்து எமது தலைமுறையைக் காப்பாற்ற முனையுங்கள். எங்களைச் சுற்றி என்ன நடந்தது எப்படியெல்லாம் நாங்கள் மூளைச் சலவை செய்யப்பட்டோம் என்பதை உணருங்கள்"

**2)** இலங்கையில் உள்ள இஸ்லாமிய இயக்கங்களையும் அடிப்படைவாத அமைப்புக்களாக பொதுமைப்படுத்திப் பார்த்தல் இன்னும் பிரச்சனைகளை அதிகரிக்கச் செய்யும் என்றொரு கருத்தை ஆண்கள் முன் வைக்கின்றனர். இங்கே நான் ஆண்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவது அவசியமானது. இவ் அமைப்புக்கள் அனைத்தும் மீதான எனது எதிர்மறையான விமர்சனப் பார்வை, தற்பொழுது நடைபெற்று முடிந்த பேரிழப்பின் பின்னர் மேலும் அதிகரித்துள்ளது.

தாக்குதலை நடாத்திய தீவிரவாதிகளுக்கும் தங்களது அமைப்பிற்கும் சம்பந்தமில்லை என்பதை நிரூபிப்பதிலேயே அனைவரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தனியே ஆண் மையச் சிந்தனையை மட்டும் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட இந்த அமைப்புக்களின் கடந்த காலச் செயற்பாடுகளை நோக்கினால் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வருவிக்கப்பட்ட நிதிகளின் மூலம் கட்டடங்கள் அமைப்பதும் இங்கே இருக்கின்ற இளைஞர்களை தங்களது சிந்தனைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதிலுமே குறியாக இருந்தனர். பின்னர் இவ்வியக்கங்களிடையே யார் தூய்மையானவர் என்பதை நிரூபிப்பதற்கான போட்டி பின்னர் சில இடங்களில் வன்முறையை தோற்றுவித்தன. பிற சமூகங்களுடன் நல்லிணக்கம் பேணல், தமது சமூகத்திற்குள் இருக்கின்ற பொதுப் பிரச்சனைகள், ஆண் பெண் சமத்துவம், பெண்களின் நலன்கள் அவர்களுக்கெதிரான வன்முறைகள், எவற்றிலுமே இந்த இஸ்லாமிய அமைப்புக்களின் செயற்பாடுகள் பூச்சியமாக இருந்து வந்துள்ளன. மாறாக பெண்களின் நடத்தைகளையும், அவர்களது ஆடைகளை வரையறை செய்வதிலும் மட்டுமே கரிசனை செலுத்தினர். எந்தவொரு சமூகத்தின் வளர்ச்சியிலும் திட்டமிடலிலும் பெண்களின் பங்களிப்பு மிகவும் அத்தியவசியமானது. அவ்வாறானதொரு பங்களிப்பற்ற எந்தவொரு சமூகச் செயற்பாடும் பின்னடைவுகளை எதிர்நோக்கும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவள். இதனை இன்றைய அனைத்து சம்பவங்களும் நிரூபித்து வருகின்றன. வேதனை, ஆற்றாமை, குற்றவுணர்ச்சி, எதிர்காலம் பற்றிய கேள்வி எல்லாம் நிரம்பியவர்களாக ஆண்கள் மட்டுல்ல எமது முஸ்லிம் பெண்களும் உழன்று கொண்டிருக்கின்றார்கள். விட்டுக் கொடுப்பு, சகிப்புத் தன்மை கொண்ட சந்ததியை கட்டியெழுப்ப தயாராக இருக்கின்றார்கள். பிற சமூகங்களுடனான சக வாழ்வினை விரும்புகின்றார்கள். சகவாழ்வுக்கான ஓர் அழைப்பிற்கு முஸ்லிம் பெண்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிக்க அவசியமாகும். இந்த வரட்டுத் தன்மை கொண்ட இஸ்லாமிய இயக்கங்கள் அற்ற ஆண், பெண் சமத்துவம் நிறைந்த ஒரு கூட்டு நல்லிணக்கம் தான் இன்றைய சூழலுக்கு உகந்தது. அதனை நோக்கியே நாம் அனைவரும் செயற்பட வேண்டும். உங்களுடைய சகிப்புத் தன்னைமையற்ற தீவிரவாத நோய்க்காக எங்களது குழந்தைகளை மீண்டும் பலியிட நாங்கள் விரும்பவில்லை.

# பயங்கரவாதத்தின் வரலாற்றுப்பார்வை



பயங்கரவாதம் 21ஆம் நூற்றாண்டின் குழந்தை அல்ல. எப்போது அரசியல் சகிப்புத்தன்மை , அரசியல் அடக்குமுறை அல்லது எதிர்ப்புத்தன்மை உருவாகியதோ அப்போதே அதன் வேர்கள் உருப்பெற்றன.

முதலாம் நூற்றாண்டில் மத்திய கிழக்கில் ரோமர்களை தூக்கியெறிவதற்கான இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட முந்தைய யூத பயங்கரவாத அமைப்பு சிசாரியாகும் (Sicarii). கலிலீயாவின் யூதாஸ், செலோரிஸின் (Zealots,)(தீவிரவாத இயக்கம்) தலைவர்தான் சிசரிக்கின் முக்கிய சூத்திரதாரிகளாக விளங்கினர். யூதர்கள் மட்டுமே கடவுளால் ஆட்சி செய்யப்பட வேண்டும் என்றும் இதற்கு

ஆயுதமேந்திய எதிர்ப்பு அவசியம் என்றும் அவர்கள் நம்பினர்.

சிசாரி அமைப்புடன் ஒத்துழைப்பு வழங்க மறுத்த யூதர்களை துரோகிகள் என்று அவர்கள் கொன்று குவித்தனர்.

சிசாரியால் பயன்படுத்தப்பட்ட தந்திரோபாயங்கள், வரலாற்று வல்லுநரான ஜோசப்ஸ் (50AD) குறித்து விரிவாக விவரிக்கின்றார் . 'அவர்கள் சனநெரிசலான இடத்துக்கு மக்களோடு மக்களாகச் சென்று, தங்கள் ஆடைகளின் உள்ளே மறைத்து வைத்திருந்த சிறிய வாள்களால் தங்கள் எதிரிகளைக் குத்திக்கொன்றனர். பின்னர் அவர்கள் விழுந்தபோது, கொலைகாரர்கள் மக்களோடு தப்பிச்சென்றனர்.

> **“பயங்கரவாதம் 21ஆம் நுற்றாண்டின் குழந்தை அல்ல.”**

20 ஆம் நூற்றாண்டின் நவீன பயங்கரவாதத்திற்கு முன், வரலாறு முழுவதும் பயங்கரவாதத்தின் பல முக்கிய உதாரணங்கள் உள்ளன. கத்தோலிக்க மன்னராட்சியை மீண்டும் கைப்பற்றுவதில் கைஃபோக்கஸ் தோல்வியடைந்த முயற்சி, மதத்தின் தூண்டுதலின் ஆரம்ப பயங்கரவாதத் திட்டத்தின் ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இதற்கிடையில், பிரெஞ்சுப் புரட்சியின் போது பயங்கரவாத ஆட்சி அரச பயங்கரவாதத்தின் ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

**இரண்டாம் உலகப் போருக்குப் பின் நவீன பயங்கரவாதம்**

சமீப காலங்களில் பயங்கரவாதம் அரசியல் காரணத்திற்காக பயன்படுத்த முடுக்கி விடப்பட்டது. ஐரோப்பிய வல்லரசுகளின் பழைய பேரரசுகளில் தேசியவாத இயக்கங்களின் எழுச்சியுடன் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நவீன பயங்கரவாதம் பெருமளவு வந்தது. இந்த ஆரம்பகால காலனித்துவ எதிர்ப்பு இயக்கங்கள் பயங்கரவாதத்தின் திறனை அங்கீகரித்தன,

ஜோர்ஜ் டவுன் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு ஆய்வு மையத்தின் இயக்குநரான புரூஸ் ஹோஃப்மேன் இவ்வாறு குறிப்பிடுகிறார்: 'இந்த குழுக்களின் திறனே, அவர்களின் உண்மையான குறுகிய எல்லைகளுக்கு வெளியே அனுதாபத்தையும் ஆதரவையும் திரட்டும். இவ்வாறு பல இடங்களில் இதேபோல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சக்தி வாய்ந்த உளரீதியான வலுவை இது கொடுத்தது. மக்களின் மனதை மாற்றும் சக்தி கொண்டு பயங்கரவாதத்தில் சர்வதேசிக்கல்களுக்கு இடையிலான உள்ளூர் மோதல்களை மாற்றியமைப்பதில் ஒரு பயனுள்ள வழிமுறையைக் கண்டது.' இந்த வளர்ச்சி 1960களில் சர்வதேச பயங்கரவாதத்திற்கு வழிவகுத்தது.

**லியோண்**

இவ்வாறு உருவாக்கப்பட்ட பயங்கரவாதம்தான் எம் நாட்டிலும் வேறுவடிவில் கால்பதித்துள்ளது.

பயங்கரவாதத்தை ஒழிக்கமுடியாது ஆனால் தடுக்கமுடியும். வெள்ளம் வரும் முன் அணைகட்டவேண்டும்.







அரங்கம் செய்திகள்

அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!

கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200
மாத்திரமே

விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com






# மீண்டும் ஏன் எமக்கு?
# காயங்களை ஆற்றும் ஆண்டவரே!
















# சொல்லத் துணிந்தேன்! 05



கிழக்கு அபிவிருத்திச் செயலணி ஏற்பாடு செய்த “மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள்” குறித்த விசேட கூட்டம் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோது, வாழைச்சேனை கடதாசி ஆலையைப் புனரமைக்க பிரதமரே தடைகளை ஏற்படுத்துகிறார் என்று மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டியதாக ஊடகச் செய்தி கூறுகிறது.

அவர் கூறுவது உண்மையானால், இப்பிரச்சினை இக்கூட்டத்தில் குற்றஞ்சாட்டுவதன் மூலம் தீர்க்கப்படக் கூடியதல்ல. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான “நல்லாட்சி” அரசாங்கத்தை தாங்கள்தான் கொண்டுவந்ததாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2015இல் இருந்து இந்த அரசாங்கத்தை ஆதரித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதுமாத்திரமல்லாது, பிரதமருக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோதும் ஜனாதிபதியினால் பிரதமர் பதவி நீக்கப்பட்டபோதும் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட போதும் நீதிமன்றம்வரை சென்று பிரதமரைக் காப்பாற்றியது தமிழ் தேசியக் கூட்டமைப்பே.

ஆகவே சீ. யோகேஸ்வரன் எம்பி தான் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஊடாகப் பிரதமருடன் பேசி இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது, அதாவது இத்தடையை நீக்குவதுதான் உகந்த அரசியல் அணுகுமுறையாக இருக்குமே தவிர, இவ்வாறு மாவட்ட மட்டக் கூட்டத்தில் பிரதமரைக் குற்றம் சாட்டுவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

உண்மையில் யோகேஸ்வரன் மாத்திரமல்ல எல்லாத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரச்சினைகளைக் கூறுவதிலேயே தமது காலத்தைக் கடத்துகிறார்களே தவிர, பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் ஆர்வமோ, அக்கறையோ, ஆளுமையோ, ஆற்றலோ, அரசியல் வல்லமையோ அவர்களிடம் இல்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒரே நோக்கம் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதைவிட அப்பிரச்சினைகளையே திரும்பத்திரும்பச் சொல்லித் தங்கள் தேர்தல் அரசியல் வியாபாரத்துக்குத் தேவையான ஊடக விளம்பரங்களைத் தேடுவதுதான்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியானது அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என எந்தப் பேதமுமின்றி, எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாவட்டச் செயலகங்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அரசாங்க அமைச்சுக்களும் திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்கள் போன்ற அரச நிறுவனங்களும் இவைகளுடன் சேர்ந்து அரசசார்பற்ற நிறுவனங்களும் தங்கள் வழமையான வருடாந்த வேலைத்திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கின்றன. தெருத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல இவைகளையெல்லாம் தாங்கள் செய்ததுபோல மக்களுக்குக் காட்டுவதுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தந்திரமாக இருக்கிறதே தவிர, தங்களுடைய சொந்தச் சிந்தனையால், செயலாற்றலால், விடாமுயற்சியால் மக்களை சமூக, பொருளாதார ரீதியாக தூக்கிவிடக் கூடிய பாரிய அபிவிருத்தித்திட்டங்களை ஏதாவது நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் 2010இலிருந்து தொடர்ந்து பத்து வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும்கூட, தனது பேர் சொல்லுமளவுக்கு ஏதாவது சாதித்துக் காட்டியுள்ளாரா என்றால், அதுவும் இல்லை. அவர் மாத்திரமல்ல, அனைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஆற்றல் இவ்வாறுதான் ”இல்லை” என்றிருக்கிறது. காரணம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் “அரசியல்” அடிப்படையிலேயே பிழையானது. வாக்கு வேட்டையாடுவதற்காக “போலி”த் தமிழ்த்தேசியம் பேசி, மக்களை ஏமாற்றும் சுயலாப அரசியலைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கிறது. அரசியல் பிழைத்தால் அனைத்தும் பிழைக்கும். தமிழர்களுக்கு அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆளை மாற்றுவதை விட, அரசியலை மாற்றுவதுதான், இந்த அவல நிலையில் இருந்து மீள்வதற்கான ஒரே வழி.

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

---

# ‘மீண்டும் பாராட்டப்பட்ட மட்டக்களப்பு மருத்துவமனை’

**மருத்துவர்**
**சிவச்சந்திரன் சிவஞானம்**




கடந்த ஞாயிறு, குண்டு வெடிப்பு நடந்ததாக செய்தி வெளியாகி கொஞ்ச நேரத்திலேயே முகப்புப்புத்தகம் உயிர்த்துக்கொண்டது. வைத்தியத்துறை சார்ந்தவர்கள், வைத்தியசாலைக்குப் பக்கத்திலிருந்தால் வைத்தியசாலைக்குப் போய் உதவுங்களென்ற பதிவுகள் பேஸ்புக்கை நிறைத்தது. சிறிது நேரத்திலேயே வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுகள் வைத்திய உத்தியோகத்தர்களால் நிரம்பிவிட்டது. இரத்தத்திற்கான தட்டுப்பாடு, இரத்தம் வேண்டுமெனக் கோரிக்கையை இரத்தவங்கி முன்வைத்தது.

அந்தக்கோரிக்கை முன்வைத்து ஒரு மணிநேரம் தாண்டமுதலே இரத்தவங்கிகளை பெருமளவானோர் சூழ்ந்து கொண்டனர். போதியளவு இரத்தம் சேர்ந்துவிட்டதென பெரும்பாலானோர் திருப்பி அனுப்பப்பட்டனர். " போனமாதம்தானே இரத்த கொடுத்தேன், மீண்டும் கொடுக்கலாமா?" எனப் பலர் என்னைக்கேட்டிருந்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவவேண்டுமென்று ஒவ்வொருவரும் துடிதுடித்தனர். இவ்வாறான அனர்த்த சம்பவங்களின் போதுதான் நம் சமூகங்களுக்கிடையே இருக்கும் உண்மையான அன்பு வெளிப்படுகிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு ஊடகவியளாளர் என்னுடன் பேசும்போது, மட்டக்களப்பு வைத்தியசாலை இந்த அனர்த்தத்தின்போது மிகவும் சிறப்பாக செயல்பட்டதாக மகிழ்சியை வெளிப்படுத்தினார்.

எமது வைத்தியசாலைகளில் இப்படியான பெரும் அனர்த்தம் ஏற்பட்டு பெருமளவானோர் ஒன்றாக பாதிக்கப்படும்போது எல்லோருக்குமான கவனிப்பையும் வழங்குவதற்கான வசதிகள் இல்லை.

சமூக வளைத்தளங்களின் புண்ணியத்தால், விடுப்பிலிருந்த வைத்தியர்களும், மற்றைய சுகாதாரப்பணியாளர்களும் விரைந்ததன் காரணமாக மருத்துவத்தை வழங்குவதற்கான மனித வளம் குறைவில்லாமல் கிடைத்ததால்தான் இவ்வாறு மற்றவர்கள் பாராட்டுமளவுக்கு சேவையை வைத்தியசாலைகள் வழங்கியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது தேவையான மருந்துகளுக்கான தட்டுப்பாடும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. பொது மக்களின் உணர்வுபூர்வமான செயற்பாட்டால் போதியளவு இரத்தமும் கிடைத்தது.

இருந்தாலும் அவசர சிகிச்சை வழங்குவதற்கான உபகரணங்கள் போதாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் அது ஒரு குறைபாடாக வெளிவராதவண்ணம் பார்த்துக்கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களும் பாராட்டத்தக்கவர்கள்.

அடுத்த கட்டமாக வைத்தியசாலை எதிர்கொண்ட மிகப்பெரும் பிரச்சினை, பிணவறையில் போதிய இடமின்மை. இவ்வாறான மரணங்களின்பின் இறந்தவர்களின் உடலை உடனடியாக உறவினர்களிடம் கொடுத்துவிட முடியாது. சட்ட ரீதியாக நிறைய கடப்பாடுகள் சட்ட வைத்திய அதிகாரிக்கு உள்ளது.

சட்ட வைத்தியத்துறையில் மிகவும் குறைவான வைத்தியர்களே இருப்பார்கள். மருத்துவத்திற்கு உதவுவதுபோல மற்றைய வைத்தியர்கள் இலகுவாகச்சென்று சட்டரீதியான விடயங்களுக்கு உதவ முடியாது. அதனால் நிறைய உடல்களைப் பிணவறையில் வைக்கவேண்டிய தேவை எழுவது தவிர்க்க முடியாதது. அதற்கான இடப்பற்றாக்குறை வந்தபோது மட்டக்களப்பு வைத்தியசாலை உடல்களை பக்கத்திலிருந்த சில வைத்தியசாலைகளுக்கு அனுப்பிச் சமாளித்ததாக அறிய முடிகிறது. இந்தக்குறைபாடுகளுக்கு மத்தியிலும் எல்லா உடல்களும் குறுகியகாலத்தில் விடுவிக்கப்பட்டது பாராட்டுதல்களுக்குரியது.

இத்தோடு மருத்துவத்துறை சார்ந்தோருக்கும், பொதுமக்களுக்குமான பொறுப்பு முடிவடைந்துவிடவில்லை. இந்தத்தாக்குதல்களில் உயிர் தப்பியவர்களின் மனநிலையும், உறவினர்களின் மன நிலையும் இயல்பு நிலைக்கு வர நீண்ட நாட்களாகலாம். மருத்துவத்துறை சார்ந்தவர்கள் அவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். அதற்காகப் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவத்துறையினரோடு இணைக்க உறவினர்களும் அயலவர்களும் முன்வரவேண்டும்.

சம்பவம் பற்றிய மீள் சிந்தனை பாதிக்கபட்டவர்களின் மனநிலை இயல்பு நிலைக்குத் திரும்புவதைப் பாதிக்கும். அதனால் இந்த அனர்த்தங்களில் உயிர் தப்பியவர்களிடம், " என்ன நடந்தது? " போன்ற கேள்விகளைத் தவிருங்கள். சமூக வளைத்தளங்களில் பகிரப்பட்ட செய்திகளும் படங்களும் கூட பெருமளவு பாதிப்புக்களை பாதிக்கப்பட்டவர் மனதில் உருவாக்கும். ஆகவே சம்பவம் பற்றி சமூக வளைத்தளங்களில் வெளியானவற்றை அழித்து விடுவதோ +மற்றவர்கள் பார்க்காதபடி மறைத்து விடுவதோ மிக முக்கியமானதாகும்.


### ஆசிரியர் குறிப்பு:

உயித்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை அடுத்த அவசர சேவையின் போது மட்டக்களப்பு மருத்துவமனையும் அதன் ஊழியர்களும் அதிகாரிகளும் பம்பரம் போன்று சுழன்று பணியாற்றியதை அங்கு சென்ற அரங்கம் குழுவும் பார்த்தது. இருக்கும் வசதியை வைத்துக்கொண்டு, நிலைமையை அவர்கள் சமாளித்ததை நாம் நேரில் பார்த்தோம். பணிப்பாளர், துணைப்பணிப்பாளர் முதல் மருத்துவர்கள், தாதிமார்,ஏனைய ஊழியர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள். மருத்துவமனைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி கலாரஞ்சி கணேசலிங்கம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தமது பணியாளர்களின் செயற்பாடு குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

அண்மையில் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் விமர்சனத்தை எதிர்கொண்ட மருத்துவமனை, இந்த அவசர உதவிப் பணிகளுக்காக பெருமைப்பட முடியும்.

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

அத்தியாயம்-03



தமிழ்வாலிபர்சங்கம்

1955இல் மட்டக்களப்பு மாநகரில் தமிழ் வாலிபர் சங்கத்தின் அழைப்பையேற்று சண்டமாருதம், திருமகள், தென்றல், தென்றல்திரை, முல்லை போன்ற பத்திரிகைகளின் ஆசிரியரான கவியரசு கண்ணதாசன் அவர்கள் மட்டக்களப்பு மைதானத்துக்கு வருகை தந்திருந்தார். அந்நேரம் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவ்விழாவுக்கு வந்திருந்தனர். அவ்விழா தாமரைக்கேணியைச் சேர்ந்த சங்கீதபூசணம் என்.ராஜூ அவர்களின் வாழ்த்துப்பாடலோடு ஆரம்பமாகியது. செ.இராஜதுரை அவர்கள் அவ்விழாவில் வரவேற்புரை நிகழ்த்தினார். அவ்விழாவில் கவியரசு கண்ணதாசன் அவர்களும் உரையாற்றி இருந்தார். அவ்வுரையை சுருக்கித்தருகிறேன்.



**கண்ணதாசனீன் உரை**

தமிழ்மொழி உருவத்தாலும் ஒலியாலும் வேறுபட்டு நின்று நிலவும் பல மொழிகளின் மூலமொழி. வேற்றரசர்களும் பேரரசர்களும் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு தமிழ் வளர்த்தார்கள். மொழிக்கு இலக்கணம் அமைத்துச் சங்ககாலங்களில் வளர்த்த பெருமை தமிழை விட வேறு மொழிகளுக்கு கிடையாது. கடல் கடந்து கள்ளத்தோணியாக அல்ல தமிழன் வெற்றி வீரனாகச் சென்ற நாடுகள் தோறும் கன்னித் தமிழ் சென்றது. கோலோச்சியது. இலங்கை, புட்பகம், சாவகம், போர்ணியோ ஆகிய நாடுகள் தமிழ்மன்னர்களின் ஆட்சிக்கு

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

உட்பட்டிருந்தன என்ற உண்மையை யாரும் மறைக்க முடியாது.

பண்டைத்தமிழ் இலக்கியங்களைப் படிக்கும் தோறும் அன்று சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த நம் இனத்தின் பெருமை நமக்கு புலனாகிறது. அறம் - தமிழ்மக்கள் வாழ்வோடு கலந்து கிடந்தது. மனையறம் - மக்களறம், மன்னன் அறம், உயிரினும் மேலாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. மானத்திற்கு பங்கம் ஏற்பட்டால் உயிரோடு வாழும் வாழ்க்கையை உதறியெறிந்திருக்கிறார்கள். தாய் மொழியை பழித்தாலும் சரி, தமிழனை பழித்தாலும் சரி, தமிழகத்தை இழித்துரைத்தாலும் சரி தமிழ்மக்கள் உள்ளமும் உதிரமும் கொதிப்படைந்தது. கங்கை நதி தீரத்திலே கல்யாண மண்டபமொன்றில் இரண்டு மன்னர்கள், கனக விஜயர்கள், கன்னித்தமிழ் நாட்டைப் பழித்துரைத்தார்கள் என்ற செய்தி கிட்டியதும், செங்குட்டுவன் போர்ப்படை இமயம் பனிவரை நோக்கிச் சென்றது. பழித்துரைத்த மன்னர் தலையில் பாறாங்கல் சுமக்க வைத்தார்கள். இது பண்டைத் தமிழ் மன்னன் வரலாறு.

போர்களத்திலே தன் கணவனை பலி கொடுத்துவிட்ட தாய், தன் பாலகன் தலைசீவி, கையில் வேல்கொடுத்து களம் அனுப்பி, வீரமரணம் எய்தினான் தன்மகன், என்ற செய்தி கேட்டு ஆனந்தம் கொண்டாள் அன்று வாழ்ந்த தமிழ்ப் பெண்.

**போரும் காதலும்**

தமிழக வரலாற்றின் எந்தப்பகுதியை புரட்டினாலும் போரும் காதலும் முதலிடம் பெற்று விளங்குவதைக் காண்கிறோம். திருமண வினையிலும் வலிமைமிக்க மாட்டைப்பொருதி மங்கையொருத்தியின் கழுத்தில் மாலை சூட்ட வேண்டியிருந்தது அன்று. மாட்டை பொருதி முறியடித்து வா என்று இன்று சொன்னால். யாருக்கும் கூறாமல் சந்நியாசம் கொள்வார்கள் நம் இளைஞர்கள்.

**தமிழர்கள் பெருமை**

உலகின் கொடுமுடியிலே தமிழர்களின் வேங்கைக் கொடி பறந்தது. கங்கை நதி தீரத்திலே -கடாரத்தின் கோட்டை மதில்களிலே தமிழ்க் கொடி பறந்தது. விரி கடலைத் தாண்டி பல நாடுகளில் தமிழ்க் கொடியைப் போற்றிப் பெருமை தேடிக் கொடுத்தவர்கள் தமிழர்கள்...... இவ்வாறு தொடர்ந்தது அவரின் உரை.

மட்டக்களப்பில் கண்ணதாசன் கலந்து கொண்ட இவ்விழாவுக்கு பின் மட்/ தமிழ்வாலிபர் சங்கத்தினால் ஏறாவூரிலும் ஓர் பிரமாண்டமான விழா நடத்தப்பட்டது. அங்கு இடம்பெற்ற சுவாரஸ்யமான சம்பவம் ஒன்றைத் இப்போது தருகிறேன். இராஜதுரையவர்களோடு மிக நெருக்கமானவர். குட்டிக்கதை குருஸ் அற்புதராஜா என்பவர். அவருக்கும் கவியரசுக்கும் நடைபெற்ற நிகழ்ச்சியது. "மாலையிட்ட மங்கை" என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற "திராவிடப் பொன் நாடே" என்ற பாடல் அன்றைய இளைஞர்களை சூடேற்றிய பாடலாகும். அது ஒரு புறமிருக்க அதேபடத்தில் இடம் பெற்றபாடல் "செந்தமிழ் தேன்மொழியாள் - நிலாவெனச் சிரிக்கும் மலர் க்கொடியால்- பைங்கனி இதழில் பழரசம் தருவாள் - பருகிடத் தலை குனிவாள்..." என்ற பாடல் அக்காலத்தில் மிகப் பிரபல் யமடைந்திருந்தது. இப்பாடல் தொடர்பாக குட்டிக்கதை குருஸ் அற்புதராஜாவுக்கு ஒரு சந்தேகம். எப்படி பருகிடத் தலை குனிவது. தலை குனியும்போது எப்படிப் பருக முடியும்? என்ற இக்கருத்தை கவியரசுடம்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் வரலாறு அங்கம் 01



மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் கிழக்கிலங்கையின் கால்பந்தாட்ட வரலாற்றில் பழமை வாய்ந்த ஒரு சங்கமாக உள்ளது. இச்சங்கம் ஏழு தசாப்த காலத்தைக் கடந்துள்ளது. இவ்வாறு எழுபது வருட வரலாற்றில் இச்சங்கத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பதிவாக்கி இளைய தலைமுறையினருக்கு அறியச் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக உணரப்படுகின்றது.

இந்த வகையில் 1970 களில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் பொருளாளராகக் கடமையாற்றிய வைத்தியர் திரு.பிறேமா(பிறேமதாஸன்) அவர்கள் வழங்கிய ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு இச்சங்கத்தின் வரலாற்றின் முக்கிய பகுதிகள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

1949 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு விளையாட்டுச் சங்கம் எனும் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு அச்சங்கம் மெய்வல்லுனர் திறனாய்வு, கிறிக்கட், கால்பந்தாட்டம் ஆகிய துறைகளில் இயங்கி வந்துள்ளது. இச்சங்கம் கால்பந்தாட்டத்தையும் விருத்தி செய்தமையால் இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற சங்கமாக இயங்கியுள்ளது.

இச்சங்கத்தின் தலைவராக அப்போதய மட்டக்களப்பு அரசினர் கல்லூரியின் அதிபர் திரு. ஜி.ஜோசப் அவர்களும், செயலாளராக எஃப்.டி.பிரான்சிஸ் என்பவரும் செயலாற்றியுள்ளார்கள்.

**து.கௌரீஸ்வரன்**

இச்சங்கத்தில் மைக்கல்மென் விளையாட்டுக் கழகம், மட்டக்களப்பு ஜீனியன் விளையாட்டுக் கழகம், றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம், புனித செபஸ்தியார் விளையாட்டுக் கழகம், புனித மிக்கேல் கல்லூரி விளையாட்டுக் கழகம் என ஐந்து விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கியுள்ளன.

1957 ஆம் ஆண்டில் இலங்கையின் கால்பந்தாட்டச் சம்மேளனம் நாட்டில் கால்பந்தாட்டத்திற்குத் தனிச் சங்கம் அமைக்கப்படல் வேண்டும் என கோரிக்கை விடுத்தமைக்கிணங்க மட்டக்களப்பு விளையாட்டுச் சங்கத்தின் ஒத்துழைப்போடு மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் ஆரம்ப காலத் தலைவர்களாக கே.குணரெட்ணம், ஈ.ஈ.கிறெனியர் ஆகியோரும், செயலாளர்களாக எஃப்.டி.பிரான்சிஸ், ஜேம்ஸ் தம்பிராசா ஆகியோரும் செயற்பட்டுள்ளார்கள்.

1958 இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ், அநுராதபுரம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மவட்டங்களின் தெரிவு அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட காப்புறுதிக் கிண்ணத்திற்கான மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத் தெரிவு அணி சம்பியனாகி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளமை பற்றி அறிய முடிகின்றது.

(தொடரும்)

# விளையாட்டு

## விதுஷா லக்ஷானி, பெற்ற பதக்கத்தை குண்டுத் தாக்குதலில் பலியானோருக்கு அர்ப்பணிக்கப்போவதாக அறிவிப்பு



ஆசிய மெய்வாண்மை சம்பியன்ஷிப் சுற்றுத்தொடரில் தாம் பெற்ற வெண்கலப் பதக்கத்தை ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் பலியானவர்களுக்கு அர்ப்பணிப்பதாக இலங்கை வீராங்கனை விதுஷா லக்ஷானி அறிவித்துள்ளார்..

டோஹா கட்டாரில் நடைபெறும் ஆசிய மெய்வாண்மை சம்பியன்ஷிப் சுற்றுத்தொடரில இந்த வீராங்கனை முப்பாய்ச்சல் போட்டியில் பங்கேற்று, இலங்கைக்கு வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார். இவர் நீர்கொழும்பை சேர்ந்தவர். கட்டுவாபிட்டிய தேவாலயத்தின் மீதான தற்கொலைத் தாக்குதலில் நெருங்கிய நண்பர்களை இழந்ததாக விதுஷா லக்ஷானி குறிப்பிட்டார்.

ஆசிய மெய்வாண்மை சம்பியன்ஷிப் சுற்றுத்தொடர் நேற்று நிறைவு பெற்றது. இதில் இலங்கைக்கு பதக்கம் வென்று கொடுத்த ஒரே வீராங்கனை என்ற பெருமை லக்ஷானியையே சாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## கடந்த காலத்தினை ஞாபகமூட்டும் குண்டுத்தாக்குதல்

'படுவான்கரையே சோகமாகவும், களையிழந்தும் காணப்படுகின்றமையினை பார்க்கின்றபோது பத்து வருடங்களுக்கு முன் படுவான்கரை பலி கொடுத்த காட்சியே தம் கண்முன்னே தென்படுவதாக' பழனித்தம்பி மண்முனை பாலத்தின் அருகில் நின்று சந்திரசேகரத்திடம் பேசிக்கொண்டிருந்தான்.

2007க்கு முன்னர் பெரும் வெடிச்சத்தங்களை கேட்ட எமக்கு, பின்னரான காலப்பகுதி பட்டாசுச் சத்தங்களையே கேட்கச் செய்தது. எதிர்பாராத சிறிதளவேனும் நினைத்துப்பார்க்காத தருணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் இலங்கை நாட்டையே அதிர வைத்துள்ளது. அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தினையும் அலர, அழ வைத்துள்ளது. இதனால் சூரியன் மறைகின்ற படுவான்திசை மக்களும் ஆழ்ந்த கவலையுடனும், தமது கடந்த கால அனுபவங்களையும் மீட்டிப்பார்க்கும் நிலையினை உண்டுபண்ணியுள்ளதாக ஞாபகப்படுத்துகின்றார் பழனித்தம்பி.

படுவான்கரையையும் எழுவான்கரையையும் பிரிப்பதாக மட்டக்களப்பு வாவி நீளமாக அமைந்துள்ளது. இவற்றினை இணைப்பதாக பாலங்கள் அமையப்பெற்றுள்ளன. 2007க்கு முன்னர் படுவான்கரைப் பிரதேசம் வெடிச்சத்தினையே கேட்டுக்கொண்டிருந்தது. தாலாட்டும், வெடிச்சத்தங்களாவே இருந்தன. அப்போதெல்லாம் மண்முனைப் பாலம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. பாலத்திற்கு பதிலாக படகுச்சேவையே காணப்பட்டது. இதனால் இலகுவில் போக்குவரத்து செய்துவிட முடியாது. தற்போதெல்லாம் போக்குவரத்தினை இலகுவாகச் செய்துவிடலாம். இவையெல்லாம் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி.

### மீள்நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பது படுவான்கரை மக்களின் கருத்து

மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக படுவான்கரைப் பிரதேசம் துப்பாக்கி சத்தங்களையும், குண்டுதாக்குதல்களையும் கேட்ட, கண்ட பிரதேசம். அப்போதெல்லாம் உணவு கூட நிம்மதியாகவிருந்து உண்டுவிட முடியாது. வீதிகளிலெல்லாம் கண்டபடி நடமாடிட முடியாது. வீடுகளுக்கு பதிலாக மடுக்களிலேயே மறையும் நிலையும் கூட இருந்தது. அடிவாங்கியதையும், அல்லல்பட்டதையும் மறந்துவிடமுடியாது என கவலைதோய்ந்த முகத்துடன் பழனித்தம்பி கூறினான்.

'தாயை, தந்தையை, உறவுகளை இழந்து தினம் தினம் படுவான்கரை மக்கள் வாடினர். உடல் அங்கங்களை இழந்து மாற்றுத்திறனாளிகளாக மாறினர். பலதுறைகளையும் இழந்தனர். இதனால்



இப்போதுதான் பலதுறைகளிலும் அத்திவாரம் இடும் மக்களாக இவர்கள் உள்ளனர்.' எனக்கூறிய சந்திரசேகரம், அல்லல் உற்ற காலங்களையும், மீண்டும் அவ்வாறான ஒருசூழல் ஏற்பட்டுவிடக்கூடாதென்பதில் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் வலியுறுத்தி நிற்கின்றனர். ஆனால் என்னவோ, துரதிஸ்டம் குண்டுத்தாக்குதலின் மூலமாக உயிரிழந்தவர்களின் உறவுகள் அனுபவிக்கும் துன்பத்தினை படுவான்கரை மக்கள் நன்கு அறிந்தவர்கள் என்றுகூறிய பழனித்தம்பி,

இலங்கையில் நடைபெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்கள் வேதனையையும் வெறுப்பையும் உண்டுபண்ணியுள்ளன. மட்டக்களப்பிலும் தேவலாயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல், அதன்பின்னரான மக்களின் அவலக்குரல், நாட்டில் தொடர்ந்தேர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்ற குண்டுகள், வெடிபொருட்கள், புலனாய்வு பிரிவினராலும், பாதுகாப்பு அமைச்சினாலும், அரசாங்கத்தினாலும் கூறப்பட்டு வருகின்ற விடயங்கள் அச்சத்தினையே ஏற்படுத்தி வருகின்றன. சினிமாவில் நடைபெறுகின்ற தோற்றத்திலான நிஜமான செயற்பாடுகள் இலங்கை நாட்டில் இடம்பெறுகின்றமை சுதந்திர நடமாட்டத்தினை இயலாமலாக்கியிருக்கின்றன. அடுத்தடுத்து அரசினால் அறிவிக்கப்படும் ஊரடங்குச் சட்டம், அவசரகாலச்சட்டம், சோதனைகள் போன்றன கடந்த காலங்களையும் ஞாபகமூட்டினாலும் கூட, இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் எக்காலத்திலும் நடைபெற்றுவிடக்கூடாது, தாம் அனுபவித்த துன்ப, துயரங்களை தம்பிள்ளைகள் அனுபவித்துவிடக்கூடாது என்பதில் படுவான்கரை மக்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.

இலங்கை அரசையும், இலங்கையின் பாதுகாப்பு பிரிவினையுமே நம்பி வாழ்கின்ற மக்களுக்கு இன்னுமொரு அவலம் ஏற்பட்டுவிடக்கூடாது. பறவைகள் பகலில் பறந்து, திரிந்து மாலையானதும் தம்கூடுகளில் வந்துசேர்வது போன்று, தற்காலச்சூழலில் வெளியில் பகல்நேரத்தில் செல்வதற்கும், மாலைநேரத்தில் வீடுகளுக்குள் உள்நுழைந்து கொண்டு தமது சுதந்திரத்தினை பறிகொடுத்து நிற்கும் மக்களின் சுதந்திரமற்ற நிலையும், மனசங்கடமும் விரைவாக நீங்கிவிட வேண்டும். அசாதாரண சூழல் தொலைந்து, சாதாரண சூழல் உருவாக வேண்டும் என்பதே பழனித்தம்பியும் விருப்பாகும். அவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருக்கையிலேயே நேரமும் 5.40, இதனை தாண்டிச்செல்ல விரைவாக வீடுகளுக்கு சென்றுவிட வேண்டும் என்ற வேகத்தில் இருவரும் சென்றனர். இதற்கு முதல் மண்முனைப் பாலத்தில் குறைந்தது 9மணிவரையாவது பேசி இருக்கும், இருவரும் தற்போது 6மணி ஆகும் முதலே வீடுகளுக்கு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவ்விடத்தினைவிட்டுச் சென்றனர்.

**படுவான் பாலகன்**

---

## மட்டக்களப்பில் அனர்த்த முகாமைத்துவ பணியாளரின் கடமைகளை வலுப்படுத்த நடவடிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் செயல்படும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் பணி புரியும் உத்தியோகத்தர்களின் கடமைகளை வலுப்படுத்தும் விசேட கூட்டம் ஒன்று வியாழனன்று (25 )காலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அனர்த்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மாவட்ட மட்டத்தில் 24 மணித்தியாலயமும் மக்களுக்கு அனர்த்தங்களின் போது கடமை புரியக்கூடியவாறு தயார் நிலையில் இருக்க வேண்டும் என அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல் செய்யப்பட்டது.

அனர்த்தங்கள் பற்றிய தகவல்களை முன் கூட்டியே சேகரிப்பதிலும் மக்களுக்கு முடிந்தளவு சேவைகளைப் புரிய பிரதேச மட்ட, கிராம மட்ட அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்கள் செயல்பட வேண்டும் எனவும் இதற்கென பிரதேச மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண குழுக்களையும் பலப்படுத்தி உசார் நிலையில் வைக்குமாறும் அரசாங்க அதிபர் இங்கு கேட்டுக் கொண்டார்.

மேலும் மக்களுக்கு அவசர அனர்த்தங்கள் ஏற்படும் வேளையில் முன்னின்று பணியாற்ற வேண்டியது அனர்த்த நிவாரண சேவை பணியாளர்களின் பொறுப்பான கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமெனவும் அவசர கால நிலைமை தொடர்பாக மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தவும்,வதந்திகளை தடுத்தல், மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளை வழங்கவும் முயற்சிக்க வேண்டும்.என்றும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

இந்த விசேட கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி



ஸ்ரீகாந், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ சேவைகள் உதவிப்பணிப்பாளர் எ.எஸ்.எம்.சியாட், உதவி மாவட்ட செயலாளர் அ.நவேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் கே.தயாபரன்,மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# அனர்த்தகால உளவியல் முதலுதவி

மூன்று தசாப்தகால யுத்தம், சுனாமி, இயற்கை அனர்த்தங்களுக்கு பின்னர், கடந்த பத்து வருட அமைதிக்கு பின் இடிவிழுந்தாற் போல் 'உயிர்த்த ஞாயிறுதின' குண்டு வெடிப்புகள் மீண்டும் இலங்கைத் தீவை பேரிடர் கட்டத்திற்குள் கொண்டு சென்றுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்தல், உதவியளித்தல், சிகிச்சையளித்தல் என்பன தவிர்க்கப்பட முடியாதவை.

### பாரிய நெருக்கடி சம்பவங்கள் எவ்வாறு மக்களை பாதிக்கின்றன?

ஒரு சம்பவத்தில் உயிரிழப்புகள், உடற் காயங்கள், அங்கவீனம், காணாமல் போதல், கைதுசெய்தல், சிறைத்தண்டனை, அச்சுறுத்தல் போன்ற பல தொடர் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனால் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள், அவர்களின் நெருங்கிய உறவுகள் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். குறிப்பாக உயிரிழப்புகள் அல்லது பாரிய பொருளாதார பாதிப்புகள் உயிரோடு இருப்பவர்களுக்கு குறுகிய, நீண்டகால நெருக்கடிகளை ஏற்படுத்தும். யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத தாக்குதல்கள், வீதி விபத்துக்கள், வீட்டு விபத்துக்கள், நீரில் மூழ்குதல், தீவிபத்துக்கள், குடும்ப வன்முறைகள், பாலியல் வன்முறைகள், கொலைச் சம்பவங்கள் என்பன அடங்கலாகப் பல வகையான நெருக்கடி நிலைமைகள் உலகில் இடம்பெறுகின்றன. தனிநபர்கள், குடும்பங்கள் அல்லது முழுச் சமூகங்களும் இவற்றால் பாதிக்கப்படலாம்.

இந்நிகழ்வுகளால் குடும்ப உறுப்பினர்கள் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டாலும், ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான உணர்வுகள், உணர்ச்சி வெளிப்பாடுகளை கொண்டிருக்கலாம். பலர் நடைபெறும் நிகழ்வுகளால் குழப்பமடைந்து தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது எனப் புரியாமல் தத்தளிக்கலாம். நிலைமைகளை கையாள முடியாது என உணரலாம். அவர்கள் விரக்தியை, பீதியை, பதகளிப்பை வெளிப்படுத்துவர். சிலவேளைகளில் மனதளவில் தொடர்பற்று பல்வேறு நடத்தை கோலங்களை வெளிக்காட்டலாம். சிலர் நிலைமைகளை சரிவர கையாளுவார்கள். ஆனால் பலரால் அவ்வாறு முடியாது. இந்த நேரத்தில் அவர்களுக்கு அருகிலிருந்து அவர்களை கண்காணித்து கையாளுவது மிக முக்கியமான உடனுதவியாகும். நடந்த நிகழ்வின் பாரதூரம், அவர்களிற்கு ஏற்பட்ட கடந்தகால அவலமான கசப்பான அனுபவங்களால் தற்போது ஏற்பட்ட விளைவுகள், அவர்களது நாளாந்த வாழ்வில் மற்றவர்களிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு, அவர்களது உடல்நலம், அவர்களது உளநலப்பிரச்சினைகள், அவர்களது சமூக, கலாசார, பண்பாட்டு, ஆன்மீக பின்னணிகள் என்பன நெருக்கீட்டு நிலைமைகளின் போது உயிரோடு இருப்பவர்களில் எதிரொலிக்கும். வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகம்கொடுக்க பலங்கள், இயலுமைகள் இருக்கின்றன. எனினும் சில சம்பவங்கள் அதன் எதிரொலிப்புகளை குறிப்பிட்ட காலம் வரை முகம்கொடுத்து மீள மேலதிக குடும்ப, சமூக உதவிகள் தேவைப்படுகின்றன.

### உளவியல் முதலுதவி

ஒரு சம்பவத்திற்கு பின் மீளமுடியாத துயர், மனவேதனை, அதிர்ச்சி நிலையில் உள்ள தனிநபர், குடும்ப உறுப்பினர்களிற்கு ஆதரவு தேவைப்படும். அவ்வேளையில் அருகிலிருந்த ஒருவருக்கு செய்கின்ற அனைத்து உதவிகளும் ஒன்றாக உளவியல் முதலுதவி எனப்படுகின்றது. இதன்போது பாதிக்கப்பட்டவர்களிற்கு மேலும் குழப்பத்தை தோற்றுவிக்காத நடைமுறைக்கு சாத்தியமான முறையில் ஆதரவும், உதவியும் வழங்குவதோடு, அவர்களது உடனடி தேவைகள், உணவு, நீர் உட்பட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல், அவர்களது மனவேதனைகளை செவிமடுத்தல், அரவணைத்தல், தனித்துவிடாது அருகிலிருத்தல், பாரதூரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பதற்கான



செயற்பாடுகளை கண்காணித்தல், தகவல்களை சரியாக சொல்லுதல், மேலதிக ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றுதல், உரிய நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க ஆவன செய்தல், பொய் வாக்குறுதிகளை தவிர்த்தல், அவர்கள் அங்கலாய்த்து திரிவதை தவிர்த்தல் போன்ற பல நற்செயல்களுடன் நேரிடையாகவும், மறைமுகமாகவும் தொடர்பற்றது.

### உளவியல் முதலுதவி யாருக்கு எப்போது தேவைப்படும்?

அண்மையில் அனர்த்த நிலைமையை முகம்கொடுத்து உளநெருக்கீட்டிற்கு ஆளான வயதானவர்கள், பெண்கள், சிறுவர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களுக்கு இதன்மூலம் உதவ முடியும். எனினும் நெருக்கடி நிலைமைகளிற்கு முகம் கொடுக்கும் அனைவருக்கும் உளவியல் முதலுதவியினை வழங்க வேண்டிய தேவை இருக்காது.

உயிராபத்தை கொடுக்கக்கூடிய காயங்கள் இருப்பதால் மருத்துவ உதவி தேவைப்படுவோர், தம்மை, தமது பிள்ளைகளை சரிவர கவனிக்க முடியாத கடும் குழப்பத்தில் இருப்போர் தமக்கு தாமே தீங்கிழைக்க கூடியோர், மற்றவர்களை காயப்படுத்தக்கூடியோர் என அறியக்கூடியவர்களிற்கு உடனடி, விசேட உடனுதவிகள் தேவைப்படும். சிலவேளைகளில் இவர்களை வைத்தியசாலைகளில் அனுமதித்து கண்காணிக்க வேண்டியும் ஏற்படலாம் பாதிப்புக்குள்ளான பெரும்பாலான நபர்கள் குறுகிய காலத்திலேயே அப்பாதிப்புகளில் இருந்து மீண்டு தமது குடும்ப. நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். சிலர் மீண்டெழ நீண்டகாலம் தேவைப்படும். அத்துடன் தமக்கு தாமே தீங்கிழைக்கும் மனநிலையில் இருந்து விடுபடவும், அவர்களிற்கு நீண்டகாலம் தேவைப்படும். உளவியல் முதலுதவியானது குறுகியகால, நீண்டகால இலக்குகளை அடைவதாக இருக்க வேண்டும்.

### பொறுப்புணர்வுடன் உதவியளிப்பது

மனநெருக்கீட்டை கொடுக்கும் சந்தர்ப்பங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல் முதலுதவி அளிக்க விசேட பயிற்சியும், பயிற்றுவிக்கப்பட்டவர்களும், தொழில்சார் உளவள ஆலோசகரும் தேவை என்றில்லை. இங்கு யாரும் இவ்வுதவியை செய்யலாம். இதன்போது சிலவற்றில் அவதானமாக இருப்பதுவும் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை தொடர்பில் தெரிந்து வைத்திருப்பதுவும் மிக முக்கியமானது.

### செய்யக்கூடியவை

பாதிக்கப்பட்ட மக்களை மேலும், பாதிப்புகளிற்கு உள்ளாக்காமல் பார்த்துக் கொள்ளுதல், சிறுவர்களையும் பெண்களையும் இயன்றவரை துஸ்பிரயோகங்கள், உடலியல், உயிரியல் மற்றும் உளவியல் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்தல் அவர்களின் பண்பாடு, கலாசாரம், சமூக வழங்கங்களிற்கு ஏற்ப நடாத்துதல், பாதிக்கப்பட்டவர்கள் நியாயமான முறையில், பாரபட்சமின்றி நிவாரணங்களை பெற உதவுதல். நிவாரணங்களை பெற மனமில்லாமல் இருப்பவர்களை இனங்கண்டு அவர்களிற்கும் அவை கிடைப்பதை உறுதிப்படுத்துதல். நேர்மையாகவும், நம்பத்தகுந்தவராகவும் நடந்துகொள்ளுதல். சொந்த முடிவுகளை எடுப்பதற்கு அவருக்கு இருக்கும் சுயாதீனத்திற்கு மதிப்பு கொடுத்தல் இப்போது உதவி தேவையில்லை என மறுத்தாலும், உதவி தேவைப்படும் போது அதனை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தெளிவுபடுத்துதல் அவர்களின் இரகசியங்களை மதித்து, அவற்றை உங்களுக்குள் வைத்திருங்கள்.

### செய்யக்கூடாதவை

உதவி செய்வதற்கு கைமாறாக எதையும் பெற்றுக்கொள்ள வேண்டாம். (பணம், பொருள், பாலியல் லஞ்சம் உட்பட) உங்களிற்கும் உதவி பெறும் நபருக்கும் இடையில் தவறான உறவை ஏற்படுத்துதல். உங்களிடம் இருக்கும் திறமைகளை அதிகப்படுத்தி காட்டுவதோ, தெரியாத விடயங்களை தெரிந்தவர்போல் பொய்யுரைப்பதுவோ தவிர்க்கப்பட வேண்டியவை. வற்புறுத்தி உதவி வழங்குதல், பாதிக்கப்பட்டவர், பகிர்ந்து கொள்ள விரும்பாத விடயங்களை துருவி ஆராய்தல், அதனை அப்படியே காற்றில் பரப்பி விடுதல் என்பன தவிர்க்கப்பட வேண்டியவை.

பாதிக்கப்பட்டவர்களின் செயற்பாடுகள் அல்லது உணர்ச்சி வெளிப்பாடுகளை கொண்டு அவர்களை நியாய தீர்ப்பளிக்க வேண்டாம். பாதிக்கப்பட்டவர்கள், தமது துயரில் இருந்து மீளும் போது மீண்டும், மீண்டும் அவர்களது விருப்பிற்கு மாறாக கதைகளை கேட்க முனைவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

### ஆர்வமுடன் செவிமடுத்தல்

பிரச்சினைகளுடன் இருப்பவர்கள் தங்கள் பிரச்சினைகளை பற்றி கதைப்பதற்கு பயப்படுவார்கள் அல்லது வெட்கப்படுவார்கள். நம்பிக்கையானவர்கள் கிடைக்கும் வரை அவர்கள் அதை திறந்து விடாமல் பூட்டி வைத்திருப்பார்கள். மழைக்காலங்களில் 'உன்னிச்சை நீர் தேக்கத்திற்கு நீர் நிரம்பும் போது, குறிப்பிட்ட கனவளவிற்கு மேல், நீர் திறந்துவிடப்படும் அல்லாது போனால் அணைக்கட்டு உடைந்து பயங்கர அழிவையும், வெள்ளப் பெருக்கையும் பின் வறட்சியையும் ஏற்படுத்தலாம். இதுபோலவே மனிதனிற்கு பிரச்சினைகள் வருவது பொதுவானது. பிரச்சினைகளை உடனுக்குடன் கதைத்து தீர்த்துக் கொள்வதே பயனுடையது. நிரம்பும் வரை இருந்தால் அது தற்கொலை, குடும்ப வன்முறை, மகிழ்வுடன் வாழ்வது போன்றவற்றை பாதிக்கலாம். பிரச்சினைக்குரிய ஒருவரிற்கு யாரும் உதவலாம். இங்கு பயிற்றுவிக்கப்பட்ட உளவள ஆலோசகர், உளநல மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் எல்லாம் இரண்டாவது இடையீடுகளிற்காகவே தேவைப்படுவார்கள். உதவி அளிப்பவர்கள் எப்போதும், எவ்வேளையிலும் யாருக்கும் உதவக்கூடிய மனநிலையில் இருத்தல் வேண்டும். உதவி பெறுபவர்கள் பெரும்பாலும் தாங்கள் சொல்லும் கதைகளை நீங்கள் ஆர்வமுடன் செவிமடுக்கிறீர்கள் என்ற காரணத்தினால்தான் அவற்றை உங்களிடம் சொல்கிறார்கள். பிரச்சினை உடையவர்களைத் தங்களுடைய பிரச்சினைகளை வெளிப்படுத்திக் கதைப்பதற்கு உற்சாகப்படுத்துவதன் மூலம் அவர்களது பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவுவது பயனுடைய இடையீடு. ஆண் பயனாளிக்கு ஆண்களும் பெண்களிற்கு பெண்களுமாக உதவுவது எமது பண்பாடு, கலாசார விழுமியங்களிற்கு மிகப்பயனுடையது அத்துடன் விபரீதங்களை தவிர்க்கவும் உதவும்.

விசேட விதமான பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ முறைகளை கையாள்வதற்கு முன்னதாக, நாங்கள் அடிப்படை உதவியளிக்கும் முறைகள் பற்றி கலந்துரையாட வேண்டும். இது உதவி நாடிவரும் பயனாளியுடனான நல்லுறவை கட்டியெழுப்புவதுடன் தொடர்புள்ளது. உளவியல் ரீதியாக உதவியளிக்கும் போது பயனாளியுடன் சுமுகமான, நம்பிக்கையான, மதிப்பளிப்புடனான உறவுமுறை இன்றியமையாதது. இந்த அடிப்படை உதவியளிக்கும் விடயங்கள் பிரச்சனைகளிற்கான, முகாமைத்துவத்தில் மிகப்பயனுடையது.

### பயனாளிக்கு மதிப்பளித்தல்

பயனாளிக்கு உதவி செய்வதற்கு உங்களிற்கு உள்ளார்ந்தமான நேர்மை தேவைப்படுகின்றது. பயனாளி மனம் திறந்து தனது புதிய பிரச்சினைகளை கதைக்கும் போது ஆர்வத்துடன் அவற்றை செவிமடுத்தல் வேண்டும். ஒரு பயனாளி தனது பிரச்சினையைப் பற்றி உங்களிடம் கதைக்கும்போது அவரை தன்மானத்துடன், கண்ணியத்துடன் நடாத்துவதற்கு இனம், நிறம், பால், வயது, மொழி, மதம், அரசியல் / கலாசார குழுக்கள், சாதி, சமூக வகுப்புக்கள், ஏழை, பணக்காரன், பால்நிலை, பிறப்பு உட்பட ஏனைய

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

நிலைகள் போன்ற எந்தவொரு பாகுபாடும் காட்டப்படலாகாது. இந்த நற்பண்புகள் பயனாளியுடன் ஆரோக்கியமான உறவை கட்டியெழுப்புவதற்கு உமக்கு அவசியமானவை. சரியான நல்லுறவு பயனாளியுடன் ஏற்படாதவிடத்து நீங்கள் வழங்கும் இடையீடுகள் பயனளிக்கப்போவதில்லை. அத்துடன் பயனாளியுடன் பணியாற்றுவதற்கு அவரிடத்தில் உள்ள கலாசார ரீதியான நம்பிக்கைகள் குறித்தும் அறிந்திருத்தல் வேண்டும். இவற்றை செய்வதற்கு பயனாளியுடன் நடைபெறுகின்ற உரையாடல்கள் மூலமும், கேள்விகள் மூலமும் அவரிடத்தில் உள்ள பொதுவான நம்பிக்கைகள் கலாசார பின்னணிகள், மத நம்பிக்கைகள் என்பவற்றை அறிந்து கொள்ளலாம். இவ்வாறாக கேள்வி கேட்கும் போது நீங்கள் அவற்றிற்கு பூரண மரியாதை கொடுத்து, ஆர்வத்துடன் செவிமடுப்பதோடு அவர்கள் குறிப்பிடுகின்ற நம்பிக்கைகளிற்கு இடையிலான வேறுபாட்டை நன்கு உணர்ந்து, அவர்கள் குறிப்பிடுகின்ற விடயங்கள் எவையெனவும் விடுபடாதவாறு அவதானிக்கவும்.

### அடிப்படை உதவி செய்யும் திறன்கள்

உங்களது பயனாளியுடன் ஆரோக்கியமான உறவை கட்டி வளர்ப்பதற்கு பல நல்ல தகைமைகளும், உளவியல் திறமைகளும் தேவைப்படுவதோடு. இவற்றை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ச்சியான இடைவிடாத பயிற்சியும் தேவைப்படுகின்றது கடந்த காலத்தில் உங்களது நெருங்கிய உறவினர், நண்பர்கள் போன்றோர் உங்களுடன் கலந்துரையாடிய விடயங்களை குறித்து நன்றியுணர்வுடன் நினைத்துப் பாருங்கள். நீங்கள் அவ்வேளைகளில் இங்கு குறிப்பிடப்படுகின்ற பல்வேறு திறன்களை செவிமடுப்பதற்கு பிரயோகித்து இருப்பீர்கள். இந்த திறன்கள் யாவும் எம்மிடத்திலும் இருப்பதோடு, அவையாவும் பயனாளியின் பிரச்சினையை செவிமடுப்பதற்கும், உதவி செய்வதற்கும் தேவையானவை.

### இரகசியம் காத்தல்

உங்களது பயனாளியுடன் வலுவான உறவை ஏற்படுத்த நம்பிக்கையும், இரகசியம் காத்தலும் பிரதானமானவை. உங்களது பயனாளிக்கு, தான் வெளிப்படையாக கூறும் கதைகள் வெளிவராதபடி பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பயனாளி ஒருவரது

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 33

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

# கற்போம்

1. எழுத்து என்றால் என்ன?
   மொழிக்கு முதற் காரணமாய் அமைகின்ற அணுத்திரளின் காரிய ஒலி எழுத்து எனப்படும்.

2. எழுத்து எத்தனை வகைப்படும்?
   இரண்டு வகைப்படும்.

3. எழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
   முதல் எழுத்து, சார்பெழுத்து.

4. முதலெழுத்து எத்தனை?
   முப்பது.

5. முதலெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
   உயிரெழுத்து, மெய்யெழுத்து.

6. உயிரெழுத்து எத்தனை?
   பன்னிரண்டு.

7. உயிரெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
   குறில், நெடில்.

8. உயிர்க்குறில் எத்தனை?
   ஐந்து.

9. உயிர்நெடில் எத்தனை?
   ஏழு.

10. மெய்யெழுத்துக்கள் எத்தனை?
    பதினெட்டு

11. மெய்யெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
    வல்லினம், மெல்லினம், இடையினம்.

12. வல்லின மெய் எத்தனை?
    ஆறு.

13. வல்லின மெய்களைத் தருக.
    க், ச், ட், த், ப், ற்.

14. மெல்லின மெய் எத்தனை?
    ஆறு.

15. மெல்லின மெய்களைத் தருக.
    ங், ஞ், ண், ந், ம், ன்.

16. இடையின மெய் எத்தனை?
    ஆறு.

17. இடையின மெய்களைத் தருக.
    ய், ர், ல், வ், ழ், ள்.

18. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் மெய்யெழுத்துக்களை எழுதுக.
    க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

19. சார்பெழுத்து எத்தனை?
    முந்நூற்று அறுபத்தொன்பது.

20. சார்பெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
    உயிர்மெய், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்.

21. அச்சார்பெழுத்துக்கள் ஒவ்வொன்றினதும் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
    உயிர்மெய் - 216, முற்றாய்தம் - 8, உயிரளபெடை – 21, ஒற்றளபெடை – 42, குற்றியலிகரம் - 37 குற்றியலுகரம் - 36, ஐகாரக் குறுக்கம் - 3, ஔகாரக் குறுக்கம் - 1, மகரக் குறுக்கம் - 3, ஆய்தக் குறுக்கம் - 2.

22. சுட்டெழுத்து என்றால் என்ன?
    தன்னகத்தேனும் தனக்குப் புறத்தேனும் ஒருவரையோ பலரையோ ஒன்றையோ பலவற்றையோ சுட்டிநிற்கும் எழுத்தைச் சுட்டெழுத்து என்பர்.

23. சுட்டெழுத்துக்களைக் குறிப்பிடுக.
    அ, இ, உ.

24. சுட்டெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
    அகச்சுட்டு, புறச்சுட்டு.

25. வினா எழுத்துக்கள் எத்தனை ?
    ஐந்து

26. சொல்லுக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எத்தனை?
    இரண்டு.

27. சொல்லுக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எவை?
    எ, யா.

28. சொல்லுக்கு இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எத்தனை?
    இரண்டு.

29. சொல்லுக்கு இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எவை?
    ஆ, ஓ.

30. சொல்லுக்கு முதலில் இறுதியிலும் வரும் எழுத்தைக் குறிப்பிடுக.
    ஏ.

31. இன எழுத்து இல்லாத மெய்யெழுத்துத் தொகுதி எது?
    இடையினம்.

32. கூட்டெழுத்துக்கள் எத்தனை?
    இரண்டு.

33. கூட்டெழுத்துக்கள் எவை?
    ஐ, ஔ.

34. கூட்டெழுத்து வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
    சந்தியக்கரம்

35. கூட்டெழுத்துக்களின் இன எழுத்துக்களை முறையே குறிப்பிடுக.
    ஐ - இ, ஔ – உ.

36. குற்றியலுகரம் என்றால் என்ன?
    தன் மாத்திரையில் நின்று குறைந்தொலிக்கும் உகரம், குற்றியலுகரம் எனப்படும்.

37. குற்றியலுகரம் எத்தனை தொடர்களைக் கொண்டது?
    ஆறு.

38. குற்றியலுகரத்தின் தொடர்களைக் குறிப்பிடுக.
    உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

39. குற்றியலுகரத் தொடர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
    உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - மிளகு,
    நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - நாடு,
    ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் - அ்.து,
    வன்றொடர்க் குற்றியலுகரம் - பத்து,
    மென்றொடர்க் குற்றியலுகரம் - வண்டு,
    இடைத்தொடர்க் குற்றியலுகரம் - சால்பு.

40. குற்றியலுகரத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
    அரை மாத்திரை.

41. 'விறகு' என்பதில் வந்துள்ள குற்றியலுகரத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
    அரை மாத்திரை.

42. 'தெளிவு' என்பதில் வந்துள்ள முற்றியலுகரத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
    ஒரு மாத்திரை.

43. 'அப்பா' என்பதில் வந்துள்ள உயிர்மெய் எழுத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
    இரண்டு மாத்திரை.

44. 'அ்.து' என்பதில் வந்துள்ள ஒற்றளபெடையின் மாத்திரையைக் குறிப்பிடுக.
    ஒரு மாத்திரை.

45. 'தொழுதெழுவாஅள்' என்பதில் வந்துள்ள உயிரளபெடையின் மாத்திரையைக் குறிப்பிடுக.
    மூன்று மாத்திரை.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## அனர்த்தகால உளவியல்

பாதுகாக்கபட வேண்டிய இரகசியங்களை நீங்கள் காவல்துறைக்கோ, சமூகசேவை அமைப்புகளிற்கோ தெரியப்படுத்தும் போது, சிலவேளைகளில் பயனாளி தனது உயிரை மாய்த்துக்கொள்ளவும், வேறு யாரையாவது நபரை பழிவாங்கும் நிலைக்கும் தள்ளப்படலாம். தொடர்ச்ச்சியான மேற்பார்வை என்பது இரகசியம் காத்தலிற்கான தடையாக அமையலாம். தொடர்ச்சியான சந்திப்புகள், மேற்பார்வையிடுதல் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி பயனாளியுடன் கலந்துரையாடுவதோடு, உங்களது மேற்பார்வையாளருடன் உதவியளிக்கும் அணியுடன் இந்த சம்பவ முகாமைத்துவம் தொடர்பாக நீங்கள் என்ன விடயங்களை கலந்துரையாடுகின்றீர்கள்? அதன் முக்கியத்துவம் என்ன? என்பதைப் பற்றியும் பயனாளி தெரிந்திருக்க உதவி செய்யவும். இரகசியம் காத்தல் என்ற செயலில், பயனாளி தொடர்பாக தெரிவிக்கின்ற விடயங்கள் முக்கியமானவை.

### தொடர்பாடல்

உங்களது பயனாளியுடன் மேற்கொள்ளும் தொடர்பாடல் முறைகள் முக்கியமானவை. பயனாளியின் உள்ளார்ந்த பிரச்சினைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், சூழ்நிலைகள் என்பவற்றை சரியான முறையில் அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யவும். மறுதலையாக பயனாளி தெரிவிக்கும் விடயங்களை நீங்கள் உங்களிற்குள் உள்வாங்கி, அவை உங்களது பிரச்சினைகளாக எடுத்துக்கொள்வதை தவிர்த்து விடவே வேண்டும். அல்லாது விடின் பயனாளியின் பிரச்சினைகள் உங்களிற்கு அதிக நெருக்கீட்டையும் மனச்சுமைகளையும் உங்கள் வேலைகளில் ஏற்படுத்தலாம்.

### உடல்மொழி திறன்கள்

பயனாளியுடன் தொடர்புகொள்வதற்கு உடலசைவுகள், உடல்மொழிகள் போன்ற திறன்களையும் பயன்படுத்த முடியும். இதுவும் பயனாளியுடனான தொடர்பாடல் முறையாக அமைகிறது. இவற்றில் பொருத்தமான கண் தொடர்பாடல், தலையசைவுகள், சரியான இருக்கை சரியான நேரத்தில் பயனாளியின் உணர்ச்சி மாற்றங்களிற்கு ஏற்ப உங்களது உணர்ச்சி மாற்றங்களையும் வெளிக்காட்டலாம். அதாவது அவர்கள் கவலைகளை வெளிக்காட்டும் போது நீங்கள் உங்கள் முகபாவனையில் அதற்குரிய உணர்ச்சிகளை காட்டவும்.

### தட்டிக்கொடுத்தல் / ஊக்கப்படுத்தல்

உங்களது பயனாளி தனது மிக அந்தரங்கமான இதுவரை மறைத்த இரகசியங்களை வெளிக்கொணர்வதற்கு ஊக்கப்படுத்தவும். அவ்வாறான நேரங்களில் அவரை நேர்முகமாக தட்டிக்கொடுத்து அந்த செயலிற்காக ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த மறக்க வேண்டாம். பயனாளியுடனான இடையீடுகள் இருக்கும் காலம் வரைக்கும் இவற்றை செய்வதற்கு பின்நிற்கவோ, தயங்கவோ, தட்டிகழிக்கவோ வேண்டாம்.

### மதிப்பீடு செய்தல்

பொதுவாக பயனாளிகள் தங்களது தனிப்பட்ட விடயங்களை தெரியாத வர்களுடன் கதைப்பதற்கு கூச்சப்படுவார்கள். அவர்களும் தங்களை ஒத்த பாதிப்புடன் இருப்பவர்களும் இவ்வாறே இருப்பார்கள் என்பதை அறிவதில்லை. தங்களது பிரச்சினையை கதைப்பது என்பது அவர்களது பலவீனமோ? மனநோய்களின் அறிகுறியோ? என்ற உணர்வுகளும் அவர்களில் இருக்கலாம். சில பயனாளிகள் தாங்கள் உணர்வதை குறித்து தங்களிற்கு தாங்களே குற்றம் சுமத்தலாம். இவ்வாறான உண்மைக்கு புறம்பான நம்பிக்கைகள் பிழையானவை என்பதை நீங்கள் பயனாளிக்கு செய்யும் இடையீடுகளின் உணர்த்த வேண்டும். இதேபோன்றே ஏனைய பயனாளிகளும் உணர்ந்து கொள்வார்கள் என்பதை யதார்த்த பூர்வமாக ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். இவ்வாறு செயற்படுவதன் ஊடாக உங்கள் பயனாளி உங்களில் மிக கூடிய நம்பிக்கையை கட்டிவளர்ப்பதுடன், இதன் மூலம் தொடர்ந்தும் அவருடனான பயனுடைய தொடர்பாடலிற்கும் உதவியாக அமையும். சிலவேளைகளில் சில பயனாளிகள் நாங்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளாத மனநிலையிலும் இருக்கக்கூடும் என்பதையும் தெரிந்திருத்தல் நன்று.

தொடர்ச்சி...

## இமாலய சாதனை புரிந்த...

குருஸ் அற்புதராஜா ஏறாவூர் கூட்ட முடிவில் வைத்தபோது. கண்ணதாசன் அவர்கள் சொன்னது. இது அனுபவத்தில் வர வேண்டியது தம்பி, அனுபவியுங்க அதுக்குப்பிறகு இது சரியா? பிழையா? என்று தெரியும் என்றார். சாமானிய இளைஞர்களும் கவியரசரோடு சகஜமாய் பழகவும், கேள்விகள் கேட்டு தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளவும், மட்டக்களப்பு தமிழ்வாலிபர் சங்கத்தின் முயற்சி பேருதவியாக இருந்தது. இராஜதுரையும் தமிழ்வாலிபர் சங்கமும் மட்/தமிழ் மக்களும் கண்ணதாசனுக்கு கொடுத்த மதிப்பும் மரியாதையும் அத்தோடு முடியவில்லை.

### மட்டக்களப்பில் கண்ணதாசன்

மட்டக்களப்புக்கு கண்ணதாசனின் அன்றைய வருகை, மட்டக்களப்பு மக்களிடம் ஒரு பெரிய ஈர்ப்பையே கொடுத்திருந்தது. அதன் தாக்கத்தால் 48 வருடங்களுக்கு



பின்பும் "கவிதேசம் இலக்கிய வட்டம்" சார்பில் திக்கவயல் தர்மகுலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட "மட்டக்களப்பில் கண்ணதாசன்" என்ற நூல் 02.11.2003ல் மகாஜனக் கல்லூரிக் கலையரங்கில் வெளியிடப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் 1955ல் கண்ணதாசனின் வருகைக்காக வாழ்த்துப்பாடல் பாடிய இசையரசர் என். ராஜு அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இவ்விழாவில் "மட்டக்களப்பில் கண்ணதாசன்" என்னும் அந்நூலின் நயவுரையை வழங்குமாறு என்னையும் அழைத்ததினால் அதன் நயவுரையை வழங்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்.

படம் 02 :- 01.விழாவைத் தலைமைதாங்கிய ஆர்.இருதயநாதன் 02.இரா.தவராஜா 03.திக்கவயல் தர்மகுலசிங்கம் 04.எழுத்தாளர் அன்புமணி 05.என்.ராஜு

இவ்வாறு கண்ணதாசனுக்கு இராஜதுரையின் அழைப்பினால் மட்டக்களப்பு மக்களால் கொடுக்கப்பட்ட இக் கௌரவத்தின் நினைவாக கண்ணதாசன் அவர்கள் இராஜதுரையை பற்றி "சந்தித்தேன் சிந்தித்தேன்" என்ற தனது புத்தகத்தில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அதில் சிலவரிகளை எடுத்துக்காட்டுக்காக கூறுகிறேன்.

1955-ல் இலங்கை மட்டக்களப்புக்கு என்னை அவர் வரவழைத்துப் பிரமாண்டமான வரவேற்புக் கொடுத்தார். அவர் இலங்கைத் தமிழரசுக்கட்சியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அங்கம் வகித்தவர். மட்டக்களப்பு மேயராக இருந்தவர். இப்போது தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி, இலங்கை ஜெயவர்த்தனா அரசவையில் அமைச்சராக இருக்கிறார்.

தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதற்கு முன்னாலும் விலகிய பிறகும் என்னுடனும் அவர் ஆலோசனை நடத்தினார். தமிழரசுக் கட்சி தம்மை பயன்படுத்திக் கொண்டு, பல முறை அவருக்கு குழி பறிக்க முயன்றிருக்கிறது என்ற விபரத்தைச் சொன்னார் அவர்.

உதாரணத்திற்கு, ஒரே மட்டக்களப்புத் தொகுதியில் இவருக்கும் இன்னொருவருக்கும் கட்சி டிக்கெட்டைக் கொடுத்தது. அந்த இன்னொருவர், கவிஞர் காசி ஆனந்தன். ஆனால் அதையும் மீறி ராஜதுரை ஜெயித்தார். ஒரே தொகுதியில் பல வருச காலமாகத் தன் செல்வாக்கை ஒரே மாதிரி வைத்திருப்பவர் ராஜதுரை.

அவரது பேச்சும் எழுத்தும் தி.மு.கழகப் பாணியிலேயே இருந்தன. இன்றும் அவரது தமிழ் நடை அறிஞர் அண்ணா அவர்களின் நடையை ஒட்டியதாகவே இருக்கிறது. எந்தவித கெட்ட பழக்கமும் இல்லாத ராஜதுரை, பழகுவதற்கு குளுமையான நண்பர்.

கருணாநிதி ஆட்சிக்காலத்தில் ராஜதுரையின் மகள் பூங்கோதைக்கு, மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. இப்போது அவர் டாக்டராகப் பணிபுரிகிறார். எங்கள் நட்புறவை பல நேரங்களில் அவர், "பூர்வஜென்ம பந்தம்" என்று குறிப்பிடுவார். அவரது குழந்தைகளும் குடும்பமும் எங்கள் குடும்பத்தில் காட்டும் பாசத்தைப் பார்த்தால், அது உண்மை என்றே தோன்றுகிறது. என்று எழுதியுள்ளார் கண்ணதாசன். (தொடரும்)

தொடர்ச்சி...

## மௌனமாக இருந்தவர்கள்...

கொணர்ந்து சேர்த்த அதே மனிதர்களால் தீனுக்கான போர் நடத்தப்படும்போது தனித்து நிற்கப் பார்ப்பது அறிவு முரணில்லையா? வழக்கம்போல அரசாங்கத்தின் சதி, மேலைத்தேய சதி என்றெல்லாம் புலனாய்வு விசாரணைகளை நமக்கு நாமே செய்து திருப்திப்பட்டுக் கொள்ள விளைவதால் எவ்வளவு தூரம் நம்மை நாம் நியாயப்படுத்திக் கொள்ளமுடியும்? அரசும் மேலைத்தேயமும் இயக்கும் பொம்மைகளாக நம் இளைஞர்களை இழுத்துச் சென்ற காரணிகளைத் தேட ஏன் தயங்குகிறோம்?

இந்தக் கட்டுரை உங்களில் பலருக்கு உவப்பாக இராது என்று எனக்குத் தெரியும். எப்போதும்போல காட்டிக் கொடுப்பவள், கைக்கூலி என்று உங்கள் இயலாமைகளைக் கோபங்களாக கொட்டிவிட்டுக் கடந்துபோவீர்கள் என்பதை அறிந்தே இருக்கிறேன்.

இந்த உண்மைகள் கசப்பானவைதான் மருந்துகள் போல. நோய் தீரவிரும்பினால் நீங்கள் ஒவ்வொருவரும் சிகிச்சையளிப்பட்டே ஆகவேண்டும். உங்கள் நோயைக் கண்டறிந்து குணப்படுத்துங்கள். நோய்க்கூறுகளுக்கு சிகிச்சையளிப்பதும் அல்லது சுகதேகிபோல நடித்திருப்பதும் உங்கள் தெரிவு.

தொடர்ச்சி...

## இலங்கை மீதான தாக்குதல் அமெரிக்காவுக்கு...

கிழக்கில்தான் இலங்கை அரசாங்கம் வைத்திருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும் உள்நாட்டுப் போர் ஒன்று நடப்பதாகவே இலங்கை அரசாங்கம் கருதுகின்றது. தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை அபகரித்து இராணுவ முகாம் அமைத்தல், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்று அங்கேதான் முழுக் கவனத்தையும் இலங்கை இராணுவம் செலுத்துகின்றது. ஆனால் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலின் பின்னரான நிலைமை என்பது இலங்கை இராணுவத்தின் சிந்தனையை மாற்றியிருக்கின்றது. சீன, பாக்கிஸ்தான் உறவின் மூலம் இலங்கையில் அரசியல் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய சாதகமான நிலைமையும் உண்டு. குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், மைத்திரி, மஹிந்த முரண்பாடுகள், கோட்டாபய, பசில் ராஜபக்ச மற்றும் பிரதான அரசியல் கட்சிகளிடையேயான உள்ளக முரண்பாடுகள் என இலங்கை அரசியலில் தற்போது எழுந்து குழப்பமான சூழலையும் சீனா, பாக்கிஸ்தான் பயன்படுத்துகின்றன. இவ்வாறு உள்ளக முரண்பாடுகளைப் பயன்படுத்தும் அணுகுமுறைகள் 2009 ஆம் ஆண்டு மே மாத்திற்குப் முன்னரான சூழலிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கில் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, தமிழ் சிங்கள முரண்பாடுகளுக்கு மத்தியில் வடக்கு - கிழக்கில் சைவத் தமிழ் மக்களுக்கும் கிறிஸ்தவ தமிழ் மக்களுக்கும் இடையே உள்ளக முரண்பாடுகளை பாக்கிஸ்தான் தூண்ட முற்படுவதாக விடுதலைப் புலிகள் இந்தியப் புலனாய்வுத் துறைக்கு அறிவித்திருந்தார்கள் என்று அப்போது புலம்பெயர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

2002 ஆம் ஆண்டு நேர்வேயின் ஏற்பாட்டுடன் சமாதானப் பேச்சுகள் இடம்பெற்றவேளை கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் வன்முறைகள் அவ்வப்போது ஏற்பட்டிருந்தன. அப்போது கூட அவ்வாறன சந்தேகம் எழுந்தது. ஆனால் அப்போது அமெரிக்காவோ இந்தியாவோ அந்தச் சந்தேகங்கள் தொடர்பாக அக்கறை செலுத்தவில்லை. மாறாக புலிகள் மீதே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

தற்போது 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இந்துத்துவ பிரச்சாரங்களை இந்திய மத்திய அரசு திட்டமிட்டுச் செய்கின்றது. இதற்காகவே ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பிணைந்திருக்கும் சைவ சமய கிறிஸ்தவ உறவுகளை உடைத்து முரண்பாடுகளை தோற்றுவிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களோடு தமிழ் மக்களை முரண்பட வைக்கும் வேலைத்திட்டங்களில் இந்துத்துவ அமைப்பு ஈடுபட்டிருக்கின்றது.

இலங்கையின் பௌத்த குருமாருடன் இணைந்துகூட இந்துத்துவ அமைப்பு சில நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது. மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் சைவத் தமிழர்களும் கிறிஸ்த்த தமிழர்களும் முரண்பட்டு மோதப்படவும் இந்துத்துவ அமைப்பே காணரம் என பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

ஆகவே வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்ச் சைவ மக்களும் கிறிஸ்தவத் தமிழ் மக்களும் மற்றும் முஸ்லிம் மக்களும் இந்திய, பாக்கிஸ்த்தான் புலனாய்வுத் துறையினரின் பிரித்தாளும் தந்திரங்களுக்கும் சிக்குப்படாமல் அவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு எடுபடாமல் மாற்று அணுகுமுறைகளை கையாள வேண்டும். இந்தக் குண்டுத் தாக்குதல் அந்தப்படிப்பினையைதான் விட்டுச் சென்றுள்ளது.

குறைந்த பட்சம் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களுடன் இணைந்து வெளிச் சக்திகளின் பிரிவினைவாத செயற்பாடுகளுக்குத் துணைபோகாமல் இருப்பதே விடுதலை வேண்டி நிற்கும் தேசிய இனங்களின் பிரதான கடமையென அவதானிகள் கருதுகின்றனர்.

இலங்கையில் எதிர்பாராத குண்டு வெடிப்பு சம்பவங்களின் மூலம் உயிரிழந்த உள்நாட்டு உறவுகள் மற்றும் வெளிநாட்டு மக்களின் ஆத்மா சாந்தி பெற

# ஆத்மா சாந்தி பூஜையும், நினைவு கல்வெட்டிற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வும்

இடம் :– புலையவெளி அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்

காலம் :– 2019/04/28 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :– காலை 08.30 மணிக்கு





**நிகழ்வுகள் :-**

**காலை 08.30 மணிக்கு ஆத்மா சாந்தி பூசை**

**காலை 09.30 மணிக்கு உயிரிழந்தவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நிறுவுவதற்காக அடிக்கல் நாட்டு நிகழ்வு**

**உறவுகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd